விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு முரித நடாள்கள், பொறிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 02 வெள்ளிக்கிழமை (19.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

வவுனியா புளியங்குளம் பகுதியில்

## உழவு இயந்திரம் - ஹன்டர் விபத்து ஒருவர் பலி; மூவர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா - புளியங்குளம் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் 24☛

## ஆவா குழுவை உருவாக்கியது கோப்பாய் பொலிஸாரே!

நீதிமன்றில் சட்டத்தரணி றெமிடியஸ்

(யாழ்ப்பாணம்)

ஆவா குழு என்ற ஒன்றை உருவாக்கியது கோப்பாய் பொலிஸார்தான். வாழையே இல்லாத தோட்டத்தில் கைக்குண்டை வைத்துவிட்டு வாழைத் தோட்டத்தில் கைக்குண்டு மீட்டதாக பொய் வழக்கைப் போட்டவர்களும் அவர்களே. அவ்வாறானவர்களால் முற்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அப்பாவிகள். அவர்களைப் பிணையில் விடுவிக்கவேண்டும்.

இவ்வாறு கடும் தொனியில் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார் மூத்த சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ். 23☛

ஜனாதிபதியை கொல்லச்சதி

## பிரதீப் பொலிஸ்மா அதிபரிடம் 9 மணி நேர வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் 9 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்த நிலையில் அங்கிருந்து சென்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, 23☛


## யாழுக்கு பேருந்தில் கஞ்சா கடத்தியவர் பொலிஸாரால் கைது

(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணம் நுவரெலியா வழித்தட தனியார் பேருந்து ஒன்றில் நான்கு கிலோகிராம் கேரள கஞ்சா கடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் 24☛

## மன்னார் காட்டு பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு



(மன்னார்)

மன்னார் தள்ளாடி ஓடுபாதை அமைந்துள்ள பகுதியில் காணப்பட்டுள்ள பற்றைக்குள் இருந்து 23☛

## எரிபொருள் விலை சூத்திரத்தை வெளியிட்ட அமைச்சர் மங்கள

(கொழும்பு)

ஒவ்வொரு மாதம் 10ஆம் திகதியும் எரிபொருள்களின் விலையை நிர்ணயிக்கும் விலைச் சூத்திரத்தை தயாரிக்கும் முறை தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமளித்துள்ளார்.

டீசல் ஒரு லீற்றருக்கு 25 ரூபாய் 23☛

ஜனாதிபதியை கொல்ல றோ சதித்திட்டம்

# இந்திய - இலங்கை நல்லுறவில் விரிசலை ஏற்படுத்துவதே நோக்கம்

அமைச்சர் மகிந்த சமரசிங்க குற்றச்சாட்டு



(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரியை கொலை செய்ய றோ சதித்திட்டம் தீட்டியதாக வெளியான செய்தியானது இந்திய - இலங்கை நல்லுறவில் விரிசலை ஏற்படுத்துவதே தகவல் வழங்கியவர்களின் நோக்கம் என அமைச்சர் மகிந்த சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். (23-ம் பக்கம்...)

## இந்தியாவுக்கு பயணமானார் பிரதமர் ரணில்

(கொழும்பு)

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியா பயணமானார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் பிரதமர் ரணில் விக்கிரம 23☛

## நாட்டின் அரசியல் நிலைமை குறித்து புலம்புகிறார் மகிந்த

கருத்து கூற விருப்பமில்லையாம்!



(கொழும்பு)

நாட்டின் அரசியல் நிலைமை குறித்து பேச எனக்கு விருப்பமில்லை. நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று காணப்படுகின்றதா என்றே சந்தேகமாகவுள்ளது. ஜனாதிபதி பிரதமரை திட்டுவதும் பிரதமர் ஜனாதிபதியை திட்டுவதும் 23☛

## பொது எதிரணியால் மாற்று அரசை உருவாக்க முடியாது

ஐக்கிய தேசியக் கட்சி சவால்

(கொழும்பு)

பொது எதிரணியினரால் மாற்று அரசாங்கத்தையோ அல்லது புதிய அரசாங்கத்தையோ உருவாக்க முடியாது. மாற்று அரசாங்கத்துக்கு பதிலாக முடியுமானால் பாராளுமன்றத்தில் 113 பெரும்பான்மையை பெற்று புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு கூட்டு எதிரணியினரிடம் ஐக்கிய தேசிய கட்சி சவால் விடுத்துள்ளது.

மாற்று அரசாங்கத்திற்கான விளக்கம் தெரியாதவர்கள் அதனை நடைமுறைப்படுத்த எத்தனித்தால் அது தோல்வியிலேயே முடிவடையும். ஸ்ரீலங்கா சுதந்திர 23☛

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் அழைப்பு

● இந்திய பிரதமர் மோடி வரவேற்பு



(டில்லி)

தவறாக மேற்கோள்காட்டப்பட்ட அறிக்கை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை தொலைபேசி ஊடாக அழைத்ததை இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார். இருநாட்டு தலைவர்களுக்கு இடையில் இடம் 23☛

## எமது இன வரலாறு பாதுகாக்கப்படாததே தமிழினத்தின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது

தமிழர் நாகரிக மைய திறப்பு விழாவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்



(பனிக்கன்குளம்)

தமிழ் இனத்தின் வரலாறுகளும் வாழ்வியல் அடையாளங்களும் பாதுகாக்கப்படாமையால் இன்று தமிழினத்தின் இருப்பும் அதன் தொன்மையும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண கல்வி பண்பாட் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கரவெட்டியில் கத்திமுனையில் பணம் அபகரிப்பு தொடர்பில் சந்தேகத்தில் மூவர் கைது

(கரணவாய்)

கரவெட்டி பகுதியைச்சேர்ந்த சேர்ந்த நபர் ஒருவரிடம் கத்தி முனையில் பணம் அபகரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து திருட்டு பொருட்களும் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி கரவெட்டி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் ஈ.சீ பணப்பரிமாற்றம் மூலம் நபர் ஒருவர் பணம் பெற்றுள்ளார்.

பின்னர் அவரை அச்சுறுத்தி கத்தி முனையில் ஒரு இலட்சத்து 99 ஆயிரம் ரூபா பணம் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் தொலைபேசி இலக்கத்தின் அடிப்படையில் தொடர் விசாரணை முன்னெடுக்கப்பட்டதன் அடிப்படையில் பளைப்பகுதியில் வைத்து துன்னாலை, வரணி பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து தண்ணீர் இறைக் கும் இயந்திரம், தொலைபேசி, ஒரு தொகை பணம என்பனவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவர்கள் பல கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவித்த நிலையில் அது தொடர்பாக பொலிஸார் தீவிரமான புலன்விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## பிரபாகரன் படத்தை லைக், ஷேர் செய்த இளைஞனுக்கு பிணை

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்துடன் முகப்புத்தகத்தில் பதிவிடப்பட்ட வாழ்த்துச் செய்தியை லைக், ஷேர் செய்த குற்றச்சாட்டில் கைதான தமிழ் இளைஞர் ஒருவர் 10 மாதங்களுக்குப் பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். குறித்த இளைஞரை பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகீராஜரத்ன அனுமதியளித்துள்ளார்.

பிரபாகரனின் புகைப்படத்தை பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காக இரத்தினபுரியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்து, சிறையில் அடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

யோட்லிபிஸ்ரன் யொய்சி

2018ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலய மாணவி யோட்லிபிஸ்ரன் யொய்சி 174 புள்ளிகளைப் பெற்றுச் சித்தி அடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதோடு 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 15 மாணவர்களையும் அவர்களின் வெற்றிக்கு வழிசமைத்த பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை சமூகத்தினர்

கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம், தருமபுரம்.

(C-417)



கண்ணீர் அஞ்சலி

அமரர் ஆறுமுகம் சந்திரசேகரம்

மண்டைதீவு, 1ஆம் வட்டாரம் (கொலண்ட்)



மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட சமூக சேவையாளரும், சிறந்த பல்துறைக் கலை வல்லுநரும் எமது ஆலய புனருத்தாரணத்தில் பெரும் பங்காற்றியவருமான ஆறுமுகம் சந்திர சேகரம் அவர்கள் காலமான செய்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரது இழப்பு எமதூருக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும். அவரது பிரிவால் மீளாத்துயருறும் துணைவியார், பிள்ளைகள், சகோதரர்கள், சுற்றத்தாருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்து அவரது ஆத்மா பூம்புகார் கண்ணகி அம்பாளின் திருவடி நிழலில் அமைதியுற வேண்டுகின்றோம்.

மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகி அம்பாள் பரிபாலன சபை, மண்டைதீவு.

(தி-4186)



கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை 2018 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை

பாராட்டி வாழ்த்துகின்றோம்



சண்முகரத்தினம் கிஷாந்தினி-184



ஜெகதீசன் யுவேதிகா-169



சிவரூபன் கோபிநாத்-166

இவர்களோடு 70 புள்ளிகளுக்கு மேல்பெற்று சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம். இவர்களின் உயர்வுக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

ரா.கிசோன்-146, சி.பிரித்திவிராஜ்-142, அ.அருஞ்யன்-141, ரா.யஜந்தன்-135, ப.வர்சனா-128, வி.விபூஜன்-123, ஜெ.சஸ்வினி-95, கு.கிலஸ்ரிகன்-75, கா.தீபிகா-72

நிர்வாகத்தினர்,

கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்,

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி.


## யாழ். தபாலகத்தின் வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தின் வாணி விழா இன்று காலை 9 மணிக்கு பிரதம தபால் அதிபர் எம்.விஜயகுமார் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் சின்மய மிசன் சுவாமிகள் ஆசி உரை வழங்கவுள்ளார்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

கலை நிகழ்வுகளும் விருந்தினர்கள உரையும் நிகழ்வில இடம் பெறும். (ம)

## ஊடகவியலாளர் நிமலராஜனின் 18ஆவது நினைவு இன்று

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

2000ஆம் ஆண்டின் ஒக்டோபர் 19ஆம் திகதி இரவு யாழ்.குடாநாட்டின் முன்னணி ஊடகவியலாளர் நிமலராஜன் தனது வீட்டில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

பிபிசி தமிழோசை, அதன் சிங்கள சேவையான சந்தேசிய உள்ளிட்ட வானொலிகள், நாளிதழ்கள், ராவய உள்ளிட்ட தமிழ் சிங்கள வார இதழ்களென தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இன்று யாழ்ப்பாணத்தில் யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் பிறபகல் 3.00 மணிக்கு படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவு தூபியிலும் தொடர்ந்து அமையத்திலும் நிமலராஜனின் நினைவேந்தல் நினைவுகள் நடைபெறவுள்ளது. (ம-9)




யாழ்.கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஸ்தாபகர் "இந்து போட்" அமரர் சு.இராசரத்தினத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா நிகழ்வு 10.10.2018இல் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. வித்தியாலய முதல்வர் கா.குணசிங்கம் தலைமையில் முன்னாள் வட கிழக்கு, மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.அனந்தராஜ் அவர்களின் ஏற்பாட்டில் பழைய மாணவன் இரா.சோதிநாதனின் தனி மனித செயற்பாட்டில் உருவாக்கம் பெற்ற இச் சிலையின் நினைவுக்கல் திரைநீக்கத்தினை அமரர் அவர்களின் மகள் திருமதி திலகவதி மாணிக்கவாசகர் அவர்கள் நிறைவேற்றுவதையும் வைபவத்தின் பிரதம விருந்தினரான வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ கலாநிதி க.சர்வேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ த.சித்தார்த்தன், இந்து போட் செயலாளரும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய தி.செல்வமனோகரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ் ஆகியோர் சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதனையும் படத்தில் காணலாம்.

(தி-4172)

# எமது வாழ்வியல் அடையாளங்கள் எம்மைவிட்டு இன்று தூர விலகிச்சென்று கொண்டிருக்கின்றன

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**மேலைத்தேய கலாசாரங்களை நாம் பின்பற்றத் தொடங்கியதாலும், எமது சந்ததி வழிவந்த அடையாளங் களை நாம் தொலைக்க முற்பட்டதாலும் இன்று எமது வாழ்வியல் அடையாளங்கள் எம்மைவிட்டு தூர விலகிச் சென்று கொண்டிருக்கின்றன என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எமது எதிர்கால சந்ததிக்கு எமது நல்ல பாரம்பரியத்தைக் கையளிக்க இப் போதிருந்தே தயாராகிக் கொள்வோம் என தெரிவித்துள்ளார்.**



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மரபுரிமைகள் நிலையம் (Heritage Centre) திறப்பு விழா நிகழ்வு நேற்று யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வட கிழக்கு மாகாண தமிழர் தாயகம் நீண்ட ஒரு பாரம்பரியத்தைக் கொண்டது. போதிய சரித்திர ரீதியான ஆய்வுகள் சில காலத்திற்கு முன்வரையில் செய்யப்பட்டிருக்காவிடினும் தற்போது எமது கலாசார பண்பாட்டு வாழ்வியல் அடையாளங்கள் பல, தொன்றுதொட்டு நிலவி வந்த எமது வாழ்க்கை முறைபற்றி வெளிவந்துள்ளன. எம்முடைய உணவுப் பழக்க வழக்கங்கள், பாவனைப் பொருட்கள், சடங்குகள் போன்றவை தனித்துவமானவை. தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வந்தவை. அத்துடன் எமது வாழ்வியல் முறைகளில் அறிவியல் சார்ந்த தொழில் நுட்பமும் ஆங்காங்கே காணப்பட்டன. எனினும் கால ஓட்டத்தில் வெவ்வேறு கலப்பு முறைகளினால் இவை மாற்றம்பெற்றுள்ளன. மேலைத்தேய கலாசாரங்களை நாம் பின்பற்றத் தொடங்கியதாலும், எமது சந்ததி வழிவந்த அடையாளங்களை நாம் தொலைக்க முற்பட்டதாலும் இன்று எமது வாழ்வியல் அடையாளங்கள் எம்மைவிட்டு தூர விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் எமது வாழ்க்கை முறையில் காணப்பட்ட கலாசார விழுமியங்கள் மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் என்பவற்றை மேலைத்தேயத்தவர்கள் பலர் அடையாளம் கண்டுள்ளார்கள். எமது தொல்பொருட்களை அதிக விலைகள் கொடுத்து வாங்கிச் சென்று தமது பகுதிகளில் பயன்படுத்த எத்தனிக்கின்றார்கள். எமது பழக்க வழக்கங்களில் காணப்பட்ட அறிவியல் சார்ந்த தொழில்நுட்பம் பற்றி உலகறியச் செய்துள்ளார்கள். எனினும் இவ்வாறான மரபுவழிப்பட்ட எமது வாழ்க்கைமுறை பற்றி எமது இளம்தலைமுறையினர் அறியாமல் இருப்பது துரதிர்ஷ்டமே. இங்கு வாழும் எமது மூதாதையர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை பற்றிய அறிவு, அவர்களின் பாவனைப் பொருட்கள் பற்றிய அறிவு ஆகியன இன்று அருகிப்போன நிலையில் அவற்றை எமது இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் மீள அடையாளப்படுத்துவதும், அவற்றின் பயன்பாடுபற்றி தெரியப்படுத்துவதும், இருப்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதும், அவற்றைக் காட்சிப்படுத்துவதும் எமது கடமையாகின்றன. எமது முன்னோர்களின் பயன்பாட்டுப் பொருட்களை தற்காலச் சந்ததியினருக்குப் பெயரளவில் கூட தெரியாத பொருட்களாக மாறிவிட்டன. எனினும் அன்று எமது மக்களின் பாவனையில் இருந்த மண்பாத்திரங்கள், கருங்கல்லினால் செய்யப்பட்ட கருவிகள், செப்புப் பாத்திரங்கள், ஓலைச்சுவடிகள், நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்திவந்த பாவனைப் பொருட்கள், அவற்றினூடு எமது மூதாதையர்கள் பயன்படுத்திய அறிவியல் தொழில்நுட்பம் போன்றவற்றை மேலைத்தேய வரலாற்று ஆய்வாளர்கள் பலர் விதந்து பாராட்டியுள்ளார்கள். அவற்றில் கண்ட தொழில்நுட்ப சூச்சுமங்களை அற்புதம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். சூழலில் மாசுக்களை ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் நடைமுறையில் இருந்து வந்த அன்றைய எமது மரபுரிமை வழக்கானது இன்றைய எமது இளம் தலைமுறையினருக்குத் தெரியாமலே போய் விட்டது. இன்றைய காலகட்டத்தின் விசித்திரம் என்னவென்றால் சேதன உரம் கொண்டு உருவாகிய உணவுப் பொருட்களுக்கு நாம் கூடிய விலை கொடுத்து வாங்குகின்றோம். ஆனால் அவ்வாறான உணவுப் பொருட்களை பாரிய சுப்பர் மார்க்கட்டுகளில் பாதுகாக்க அவற்றுள் நச்சுத்தன்மை கொண்ட இரசாயன கலவைகளை உட் செலுத்துகின்றோம் அல்லது பூசுகின்றோம் என்பதை அறியாமலே நச்சுச் சூழலுக்கு அடிமையாகின்றோம். பசுமை மிக்க இயற்கையுடன் வாழ்ந்த வாழ்க்கை அன்றைய வாழ்க்கை. எமது அடையாளங்கள் இன்று தொலைக்கப்பட்டு சுன்னாம்புக்கற் சூளைக்குள் எமது சீவியம் நடைபெறுகின்றது.

எமது வாழ்க்கை முறை மாறிவிட்டது. நோய்களும் கூடி விட்டன. மருத்துவர்களும் மருந்தகங்களுந் தான் நன்றாக உழைக்கின்றார்கள்! நாம் எம்முடைய பால்ய வயது வாழ்க்கைக்கு நீங்கள் மாறுங்கள் என்று கூறவில்லை. வாழ்க்கை மாற்றம் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியதொரு நிகழ்வு. ஆனால் எமது அடிகளைத் துருவி ஆராய்வதிலும் அவற்றில் காணும் தொழில்நுட்ப சிறப்பை பங்கிட்டுக் கொள்வதிலும் பல நன்மைகள் இருக்கின்றன.

எமது முறைமைகள், மரபுரிமைகள் இந்த சந்ததியுடன் மட்டும் நிறைவு பெற்று விடா. அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் இந்த வாழ்வியல் முறைமைகள் கொண்டு செல்லப்பட வேண்டும். எமது பாரம்பரியங்களில் எமக்கு அறிவும், ஆர்வமும் பிறக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ முறைகள் கூட இன்று உலகளாவிய ரீதியில் மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்று விளங்குவது சிறப்பிற்குரியது. எதுவித பக்க விளைவுகளும் இன்றி மிகக் குறைந்த செலவில் மேற்கொள்ளக்கூடிய எமது மூலிகை மருத்துவ முறைமைகள் மேற்கு நாட்டு மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

நாமோ எம்மைச் சுற்றி இருக்கின்ற மருத்துவக் குணம் நிரம்பிய மூலிகைகள் பற்றி எதுவுமே அறியாது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெறுகின்ற இரசாயனக் குளிகைகளையும் மருந்து வகைகளையும் உட்கொண்டு வருகின்றோம். நான் கூட அதைத் தான் செய்கின்றேன். காரணம் விரைவில் குணமடைய வேண்டும் என்ற வேகமும் ஆர்வமும். பக்க விளைவுகள் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

அக்காலத்தில் எமது முன்னோர்களின் வாழ்வியல் முறைமைகள் மிக எளிமையாக்கப்பட்டிருந்ததால் தனி ஒருவரின் உழைப்பின் கீழ் அவரின் முழுக் குடும்பமே வாழக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. இன்று அனைவரும் வேலைக்குச் செல்வதால் ஓய்வு நேரமும் கிட்டவில்லை. குடும்ப அமைப்பும் சீராக இல்லை. இவை அனைத்தையும் நாம் கருத்தில் கொண்டு எமது பாரம்பரிய கலாசார வாழ்வியல் முறைமைகளை அறிந்து கொள்ள முற்பட வேண்டும். நாம் எவ்வாறு சிறப்புடன் வாழ்ந்து வந்தோம் என்பதை உணர்ந்து கொள்ள, அறிந்து கொள்ள முன்வர வேண்டும்.

பாரம்பரியங்களை நாம் அறிவதால், அவற்றின் அடிப்படை தொழிற்றிறன் பற்றி அறிவதால், எமது வாழ்க்கையில் ஒரு மாண்பு உண்டாகின்றது. ஒரு மதிப்பு ஏற்படுகின்றது. எமது எதிர்கால சந்ததிக்கு எமது நல்ல பாரம்பரியத்தைக் கையளிக்க இப்போதிருந்தே தயாராகிக் கொள்வோம் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## கோத்தபாயவை கைதுசெய்ய தடைகோரும் மனு நவம்பர் 2ஆம் திகதி விசாரணைக்கு

### மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொதுவுடைமைகள் சட்டத்தின் கீழ் தன்னை கைது செய்ய தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள வழக்கை எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி மீண்டும் அழைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப் பட்டது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதால் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிக்கும் தேவையில்லை என்று கோத்தபாய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

குறித்த வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதா? இல்லையா? என்று தெரிவிப்பதற்காக கால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி குறித்த வழக்கை தொடர்ந்து விசாரிப்பதா? இல்லையா? என்று நவம்பர் 2 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு; நேவிசம்பத் மீண்டும் மறியலில்

(கொழும்பு)

கொழும்பில் 11 தமிழர்களைக் கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள நேவி சம்பத் என்ற லெப்டினட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சியை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று கோட்டை பதில் நீதவான் ஜெயந்த டயஸ் நாணயக்கார முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 2008 - 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 5 மாணவர்கள் உட்பட 11 தமிழர்களைக் கடத்திச் சென்று காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் நேவி சம்பத் கடந்த மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

தலைமறைவாக இருந்து வந்த இவர், கொழும்பு கோட்டைப் பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவரால் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கப்பம் கோரும் நோக்கில் 11 தமிழர்கள் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் கடற்படையின் உயர் அதிகாரிகளுக்கும் தொடர்புள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீர துட்டகைமுனு இயக்கம் மேர்வின் தலைமையில் உதயம்



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள வீர துட்டகைமுனு இயக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி அநுராதபுரத்தில் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இதனை அறிவித்தார். வடக்கிலும் கிழக்கிலும் இனவாதம் உருவாவதை அனுமதிக்க முடியாது. மன்னர்களது ஆட்சியின் போது இந்நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர் ஆகிய சகலரும் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளனர்.

சிங்களவர்களுக்கு இந்நாட்டில் இருந்த உரிமைகள் இல்லாமல் போவதை அனுமதிக்க முடியாது. அதனை மீளவும் பெற்றெடுப்பது இந்த அமைப்பின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் குழுவும் ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கமும் இந்நாட்டிலுள்ள சிங்களவர்கள் வீழ்ந்துள்ள பாதாளத்திலிருந்து மீட்டுப்பதற்கு தவறியுள்ளன. இவர்கள் வடக்கிற்குச் சென்று தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர். கிழக்குக்குச் சென்று முஸ்லிம் மக்களை ஏமாற்றுகின்றனர் எனவும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆஸிக்கு இமாலய இலக்கு



சிறப்பாக துடுப்பெடுத்தாடி 99 ஓட்டங்கள் எடுத்த பாகிஸ்தானின் பாபர் அசம்

ரன் - அவுட்டான ஏமாற்றத்தில் அசார் அலி

பாகிஸ்தான் வீரர்களின் பிரமாதமான துடுப்பாட்டத்தினால் அபு தாபி டெஸ்டில் வெற்றியீட்டும் வாய்ப்பு அவ்வணிக்கு வாய்த்துள்ளது. 538 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, நேற்றைய 3ஆம் நாள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 47 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் (யு.ஏ.இ.) பாகிஸ் தான் - அவுஸ்திரேலியா அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கும் இடையில் டுபாயில் நடைபெற்ற முதல் டெஸ்ட் சமனிலையான நிலையில், இரண்டாவது டெஸ்ட் கடந்த 17ஆம் திகதி அபு தாபியில் ஆரம்பானது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 282, அவுஸ்திரேலியா 145 ஓட்டங்கள் எடுத்தன. தொடர்ந்து தமது 2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அசார் அலி (54), ஹரிஸ் சொகைல் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பாபர் அரைச்சதம்**

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. சொகைல் 17 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். அசார் அலி (64) 'ரன்-அவுட்' ஆனார். சபிக் (44) அரைச்சத வாய்ப்பை இழந்தார். அபாரமாக துடுப்பெடுத்தாடிய பாபர் அசாம் பாகிஸ்தான் அணிக்கு சிறப்பான முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

இவர் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதத்தை மயிரிழையில் நழுவவிட்டார். தன் பங்கிற்கு அணித் தலைவர் சர்பராஸ் (81) அரைச்சதம் எட்டினார்.

பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 400 ஓட்டங்களை எடுத்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனையடுத்து அவுஸ்திரேலிய அணிக்கு 538 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இவ்விலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஷோன் மார்ஷ் (4) மீண்டும் ஏமாற்றினார்.

இந்நிலையில் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 47 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பின்ச் (24), ஹெட் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டி நிறைவடைய 2 நாட்கள் இருக்கும் நிலையில், பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்ற பிரமாதமான வாய்ப்பு காத்திருக்கிறது.

**காமெடி ரன்-அவுட்**

பீற்றர் சிடில் வீசிய பந்தை அசார் அலி சிலிப் திசையில் அடித்துவிட, அது தேர்ட்மேன் திசையில் பவுண்டரியை நோக்கி வேகமாகச் சென்றது. இதைப் பார்த்த அசார் அலி பந்து பவுண்டரிக்கு செல்கிறது என நினைத்து ஓட்டம் எடுக்காமல் நிதானமாக நடந்து ஆடுகளத்தின் நடுப்பகுதிக்கு வந்தார்.

எதிர்தரப்பில் இருந்த அசாத் சபிக்கும் வந்து அவருடன் சுவாரஷ்யமாக பேசிக்கொண்டிருந்தார். ஆனால், பவுண்டரியை நோக்கி வேகமாகச் சென்ற பந்து பவுண்டரி எல்லையை தொடாமல் நின்றுவிட்டது. இதைப்பார்த்த மிட்ஷல் ஸ்டார்க் பந்தை எடுத்து விக்கெட் காப்பாளர் பெய்னிடம் வீசி எறிந்தார். அவர் பந்தைப் பிடித்து அசார் அலியை ரன் அவுட் செய்தார்.

ஆனால் அசார் அலிக்கோ ஏன் விக்கெட் காப்பாளர் பெயின் ரன்அவுட் செய்தார் என்று தெரியாமல் திருதிரு என விழித்துக் கொண்டிருந்தார். அதன்பின் நடுவர் நடந்த சம்பவங்களை எடுத்துக் கூறியதும் தலையில் அடித்துக்கொண்டு அசார் அலி வெளியேறினார்.

## போல்ட் மறுப்பு

மால்டா நாட்டை சேர்ந்த கால்பந்து கழக அணியின் அழைப்பை ஜமைக்காவின் உசைன் போல்ட் நிராகரித்தார்.

உலகின் 'மின்னல் வேக' மனிதன் என புகழப்படுபவர் ஜமைக்கா தடகள வீரர் உசைன் போல்ட் (வயது-32), ஒலிம்பிக்கில் 8 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

தடகளத்திலிருந்து ஓய்வு பெற்றபின், கால்பந்தில் கவனம் செலுத்தி வருகிறார். அவுஸ்திரேலிய 'ஏ லீக்' தொடரில் பங்கேற்கும் சென்ட்ரல் கோஸ்ட் மரைனர்ஸ் கழக அணியில் இணைந்தார்.

சமீபத்தில், நட்பு கால்பந்து போட்டியில் இரண்டு கோல்கள் அடித்ததால், மால்டா நாட்டை சேர்ந்த வாலெட்டே கழக அணி இரண்டு ஆண்டிற்கு ஒப்பந்தம் செய்ய முன்வந்தது. இதை போல்ட் மறுத்துள்ளார்.

இது குறித்து போல்ட் மனேஜர் ரிக்கி சிம்ஸ் கூறுகையில், "உசைன் போல்ட் கால்பந்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில், இவருக்கு பல கழக அணிகளிலிருந்து அழைப்பு வருகிறது. ஆனால், மால்டா நாட்டை சேர்ந்த கழக அணியில் இணைய போல்ட்டிற்கு விருப்பம் இல்லை," என்றார்.

வாலெட்டே கழக அணி தலைமை செயல் அதிகாரி ஷோன் மிலாகம்ப் கூறுகையில், "போல்ட்டின் கால்பந்து வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம். எங்கள் அணியில் போல்ட் இணைய வேண்டும் என்ற விருப்பம் எப்போதும் இருக்கும்," என்றார்.

# அவுஸ்திரேலிய மண்ணில் அசத்துமா இந்தியா?

## ஹர்பஜன் கணிப்பு எப்படி?

"ஸ்ரீவ் ஸ்மித், வோர்னர் இல்லாத நிலையில் அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரை கைப்பற்றலாம்," என அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் கணித்துள்ளார்.

அடுத்த மாதம் அவுஸ்திரேலியா செல்லும் இந்திய அணி, மூன்று 'ரி20', நான்கு டெஸ்ட், மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் வரும் டிச. 6 ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய மண்ணில் இவ்விரு அணிகள் இதுவரை 11 முறை டெஸ்ட் தொடரில் மோதியுள்ளன.

இதில் அவுஸ்திரேலியா 8 முறை (1947-48, 1967-68, 1977-78, 1991-92, 1999-2000, 2007-08, 2011-12, 2016-17) தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது. மூன்று முறை (1980-81, 1985-86, 2003-04) தொடர் சமன் ஆனது.

இம்முறை இந்திய அணி அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றும் என, இந்திய சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது,

அவுஸ்திரேலிய அணியில் தடை காரணமாக ஸ்ரீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் இடம்பெறமாட்டார்கள். இது இந்திய அணிக்கு சாதகமான விடயம்.

எனவே, இம்முறை இந்திய அணி அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

சமீபத்தில் முடிந்த மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒரு தலைபட்சமாக அமைந்தது.

ஒருபுறம் இந்திய அணியினர் சிறப்பாக விளையாடினர்.

ஆனால் மறுமுனையில் மே.தீவு அணி வீரர்கள் எவ்வித போராட்டத்தையும் வெளிப்படுத்தவில்லை.

சமீபகாலமாக மே.தீவுகள், இலங்கை, சிம்பாப்வே அணிகளின் செயற்பாடு மிகவும் மோசமாக உள்ளது.

முன்னதாக இந்த அணிகளில் நிறைய 'மட்ச்வின்னர்கள்' உருவாகினர். ஆனால் தற்போது எல்லாம் தலைகீழாகி விட்டது. இது, கிரிக்கெட்டுக்கு உகந்ததல்ல என்றார்.



குல்தீப் யாதவ்

**குல்தீப் அசத்தல்**

குல்தீப் யாதவ் 'சுழலில்' அசத்தி வருகிறார். சமீபத்திய மே. தீவுகள் தொடரில் இவரது செயற்பாடு சிறப்பாக இருந்தது.

இவர், வரும் காலங்களில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக உருவெடுத்து, உலகின் 'நம்பர் 1' சுழற்பந்து வீச்சாளராக ஜொலிப்பார். இங்கிலாந்து மண்ணில் இவரது பந்துவீச்சு எடுபடவில்லை. இதற்கு அங்குள்ள தட்பவெப்ப நிலை காரணம். வேகப்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளம் மற்றும் குளிர் காரணமாக இவரால் பெரிய அளவில் சாதிக்க முடியவில்லை. இனி, வரும் காலங்களில் இங்கிலாந்து மண்ணிலும் முத்திரை பதிப்பார் என நம்புகிறேன். இவ்வாறு ஹர்பஜன் சிங் கூறினார்.

## காலிறுதியில் சாய்னா



போட்டியின்போது சாய்னா நேவல்...

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் தொடரின் காலிறுதிக்கு இந்திய வீராங்கனை சாய்னா நேவல் முன்னேறினார்.

டென்மார்க்கின் ஒடின்சி நகரில் சர்வதேச பட்மிண்டன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் தரவரிசையில் 11 ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் சாய்னா, 'நம்பர் 2' வீராங்கனையான ஜப்பானின் அகானா யமாகுசியை எதிர் கொண்டார்.

முதல் செட்டை 21-15 என கைப்பற்றிய செய்னா, அடுத்த செட்டையும் 21-17 என தனதாக்கினார். முடிவில், சாய்னா 21-15, 21-17 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

**நான்கு ஆண்டுக்குப்பின்....**

இதன் மூலம், சாய்னா நான்கு ஆண்டுக்குப் பின் அகானாவை வீழ்த்தி உள்ளார்.

கடைசியாக, கடந்த 2014ல் சீன ஓபனில் இவரை சாய்னா வென்றிருந்தார். ஒட்டுமொத்தமாக, இதுவரை இருவரும் 8 போட்டியில் மோதி உள்ளனர். இதில் சாய்னா 2, அகானா 6 போட்டிகளில் வாகைசூடி உள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சாய் பிரனீத் 21-12, 14-21, 15-21 என சீனாவின் ஹுயாங்கிடம் தோல்வியடைந்தார்.



## அழுவதா அல்லது சிரிப்பதா எனத் தெரியவில்லை

# அரசியலிலிருந்து விலக எனது தாய் பணிப்புரை

## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் செய்ய முடியாது எனவும், அரசியலை விட்டு விலகுமாறு தனது தாயார் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த செய்தியாளர் சந்திப்பில் அழுவதா அல்லது சிரிப்பதா என்பது தெரியவில்லை. எமது நாட்டுக்கு புகையிரதம் பேருந்து போன்ற பல்வேறு புதிய திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

அவற்றுக்கு உடனடியாக அனுமதி வழங்க முடியாது. இவ்வாறு அனுமதி கிடைக்காவிட்டால் உடனடியாக ஊடகங்களை அழைத்து சந்திப்பு நடத்துகின்றனர்.

ஊடகங்களும் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளாது செய்தி வெளியிடுகின்றன. கடந்த 2017ஆம் ஆண்டு இந்த புகையிரத திட்டம் தொடர்பில் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பான மதிப்பீடுகளின் பின்னர் அனுமதி மறுக்கப்பட்டது. ஐந்து பில்லியன் யூரோ பெறுமதியான இந்த முதலீட்டுக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

எவ்வளவு பெரிய திட்டம் என்றாலும் உரிய ஆவணங்கள் இன்றி அனுமதி வழங்கப்பட முடியாது. இந்த முதலீட்டுக்காக எண்ணக்கரு ஒன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எண்ணக்கரு ஒன்றுக்காக அனுமதி வழங்கப்பட முடியாது. இந்த திட்டத்தை கொண்டு வரும் நபர்கள் வங்கிகளில் கடன் பெற்றுக் கொண்டு செலுத்த முடியாது.

அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது. இவ்வாறான ஓர் பின்னணியில் பாரிய திட்டமொன்றை அவர்களுக்கு வழங்குவது சாத்தியப்படாது என்ற காரணத்தினால் அனுமதி மறுக்கப்பட்டது.

ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் எவ்வித உறுதிப்படுத்துதலும் இன்றி வெளியிடப்படுகின்றன. செய்திகளை பார்த்த எனது தாயாருக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

எனக்கு எதிராக போலிச் செய்தி வெளியிட்ட ஒவ்வொரு ஊடகத்திற்கும் தனித் தனியாக ஐந்து மில்லியன் ரூபா நட்டஈடு கோரி வழக்கு தொடரப்படும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட முடிந்த அனைத்து வழிகளிலும் எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐ.தே.க. செயற் குழுவுக்கு பொன்சேகாவின் பெயர்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழு உறுப்பினராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது. ஜனநாயகக் கட்சியின் தலைவராக செயற்பட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சரத் குமாரவின் வழக்கு டிசெம்பர் விசாரணைக்கு



(கொழும்பு)

நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தி நிதியை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன உள்ளிட்ட 6 பேருக்கு எதிரான வழக்கு டிசெம்பர் 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த முறைப்பாடு சம்பந்தமாக பாரிய ஊழல் மோசடிகள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணையின் பரிந்துரை அறிக்கையை பிரதிவாதி தரப்புக்கு வழங்குமாறும் நீதிபதி ஜனாதிபதி செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம் பிரதிவாதிகளின் கோரிக்கைபடி சரத் குமார குணரத்னவுக்கு டிசெம்பர் 10 ஆம் திகதி வரையான காலம் வரை வெளிநாட்டுப் பயணத் தடை விலக்கிக் கொள்ளப்படுவதாகவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார் (இ-7)





நல்லூர் சிவன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் சாரதா நவராத்திரி சண்டீஹோம விழாவில் 10 ஆம் நாள் அம்பிகையை குமாரீ ரூபமாகவும் சுவாஸினி ரூபமாகவும் வழிபடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. இன்று மாலை 5 மணியளவில் மானம்பூ உற்சவம் நடைபெறும். (படங்கள்- ஐ. சிவசாந்தன்)

# ஆசிரியர்களை இணைக்க விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக கலை, மொழித்திறன் சார்ந்த வகுப்புக்களை வருடந்தோறும் நடத்தி வருகின்றது.

இதற்கமைவாகப் பருத்தித்துறை பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2019 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், கிராமியக் கலைகள், யோகாசனம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்தவுள்ளது.

இதற்கான ஆசிரியர்களுக்காக தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். மேலும் தமது பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி, இலக்கம், கல்வித்தகைமை, துறைசார்ந்த தகைமை போன்ற சுயவிபரங்கள் அடங்கிய தமது விண்ணப்பத்தினை எதிர்வரும் 24.10.2018 புதன்கிழமைக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு நிலையப்பொறுப்பதிகாரி, பிரதேச கலாசார மத்திய நிலையம், புற்றளை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நேர்முகத்தேர்வின் மூலம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர். தொடர்பு இலக்கம் 077 669 6019 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## சமூக விரோதிகளே திருந்துங்கள்

# மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எமது மக்களின் ஐக்கியமானதும், சந்தோசமானதுமான நல் வாழ்விற்காக மாறிக் கொள்ள வேண்டுமென சாவகச்சேரி பிரதேசசபையின் உறுப்பினர் ந.பாலச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப் பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது மக்களுக்கு ஏற்படுகின்ற நன்மைகள், தீமைகள் மற்றும் கஷ்டங்கள் என்பவற்றில் நாமும் பங்கு கொள்ள வேண்டியது அல்லது எமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். தற்போது குடாநாட்டுப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற பயமுறுத்தல்கள், அதனோடு சேர்ந்த களவுகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றால் அமைதியாகவும், சந்தோசமாகவும் இருந்த எமது சமூகம் அமைதியற்ற சூழ்நிலையில் பயப்பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அன்பானவர்களே, எமதருமை உடன் பிறப்புக்களே தயவுசெய்து இவ்வாறான சமூக விரோதச் செயல்களைச் செய்பவர்கள் எமது மக்களின் ஐக்கியமானதும், சந்தோசமானதுமான நல் வாழ்விற்காக மாறிக் கொள்ள வேண்டுமென்று சாவகச்சேரி பிரதேசசபை சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பொதுமக்களின் பாதுகாவலர்களாக விளங்கும் பொலிஸாரும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் பொழுது விரைந்து தடுத்து நிறுத்துவதற்கு உதவ வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபை சார்பாக கேட்டுக் கொள்கிறேன் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# வாணிவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை வாணிவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை முதல்வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெறும். (இ)


## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்

கரணவாய் கிழக்கு, கரவெட்டி
நவராத்திரி விழா- 2018

இடம்:- நிலைய முன்றல்
காலம்:- 20.10.2018 (சனிக்கிழமை)
நேரம்:- மாலை 3.30 மணி

தலைவர்
திரு.கணேசன் திருமாலழகன்

பிரதம விருந்தினர்
திருமதி.கலைவாணி புஸ்பராஜன்
(இசைக் கலைமாணி, கலாவித்தகர்,
ஓய்வு நிலை சங்கீத ஆசிரியர்)

சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி த.கலாமணி
(ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)
Mr.K.M.A.K.Konara
(Inspetor of Police officer- in-charge,
Police station , Nelliady)

கௌரவ விருந்தினர்
திரு.கிருஷ்ணராசா கிருஷ்ணமேனன்
(கிராம சேவையாளர், கரணவாய் கிழக்கு,கரவெட்டி)

கலை நிகழ்வுகள்

இரவு 7.30 மணிக்கு மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பாட்டு
சரஸ்வதி துதி நடனம்
கவியரங்கம் - 'பேசாத பொருள் ஒன்று பேசிவிட்டால்'
குழு நடனம்
தனி நடனம்
குழு நடனம்
வில்லுப்பாட்டு- அபிராமிப் பட்டர்
வாத்திய பிருந்தா
நகைச்சுவை நாடகம்
கரவை பிக்போஸ்
கரவை கானங்கள்
இன்னிசை நிகழ்ச்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகத்தினர்


# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மேடம்:** வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும உயரும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் சந்துசேரலாம்.

**இடபம்:** பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், உடல்நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்ப பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மகரம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** எண்ணியது நிறைவேறும் நாள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**தனுசு:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், புத்திசாதுரியமாக நடந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** தொட்டகாரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது. சந் | | | |
| சனி | குரு | சூரி. புத. சுக் | |

சந்திராஷ்டமம்
பூசம்
இரவு 6.50 மணிக்கு
கும்-சந்

19.10.2018
ஐப்பசி 02, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
தசமி மாலை 5.56 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 4.03 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
கேதார கௌரி விரதாரம்பம்,
ஐப்பசி வெள்ளி, விஜயதசமி

வளவன்

## குடியியல் நடவடிக்கை சட்ட கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. அப்புத்துரை சர்வானந்தன் (முன்னாள் செயலாளர், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம் தற்போதைய நிர்வாக அங்கத்தவர்)
"ஆனந்தகம்" கந்தரோடை, சுன்னாகம்.

2. பாக்கிநாதன் மிதுசன்
(முன்னாள் அங்கத்தவர் தற்போதைய உதவி செயலாளர்-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்) கற்பக்குணை, கந்தரோடை, சுன்னாகம்.

3. குமாரவேலுப்பிள்ளை கைம்பெண் புனிதவதி (அங்கத்தவர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்) சித்தியார் வளவு, கந்தரோடை, சுன்னாகம்.

4. குலகுணராணி செல்வக்குமாரன்
(அங்கத்தவர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்) கந்தரோடை, சுன்னாகம்.

5. கனகசபை செல்வக்குமாரன் (நிர்வாக அங்கத்தவர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்) கந்தரோடை, சுன்னாகம்.

6. தற்பரானந்தன் கைம்பெண் நகுலாம்பிகாதேவி (அங்கத்தவர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்) கந்தையா உபாத்தியாயர் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

தன்மை-காணி

வழக்கு இல-402/2018

எதிர்

1. சிதம்பரப்பிள்ளை சிவராஜன் அதிபர், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை, சுன்னாகம்.

2. சின்னத்துரை அமிர்தலிங்கம் "முத்துவாசா" கந்தரோடை, சுன்னாகம்.

3. தில்லையம்பலம் சாந்தகுமார் நவாலி கிழக்கு, மானிப்பாய்.

4. தில்லைராசா சிறீதரன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

5. செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு காரியாலயம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

6. மாகாண கல்வி பணிப்பாளர், கல்வி திணைக்களம், மருதனார் மடம், சுன்னாகம்.

7. வலய கல்வி பணிப்பாளர், வலய கல்வி அலுவலகம், மருதனார்மடம், சுன்னாகம்.

8. கோட்டக் கல்வி பணிப்பாளர், உடுவில் கோட்டக் கல்வி அலுவலகம், இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில்,சுன்னாகம்.

9. கௌரவ சட்டமா அதிபர் ,சட்டமா அதிபர் காரியாலயம், கொழும்பு -12.

எதிராளிகள்

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் கூட்டு இணைக்கப்படாத பழைய மாணவர் சங்க அமைப்பின் அங்கத்தவர்களுக்கு மேற்குறித்த வழக்காளிகள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மேலே பெயர் குறித்த எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை வேண்டி மேற்குறித்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

நிவாரணங்கள்

1. மேற்குறித்த 1 ஆம் எதிராளியும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் அதிபருமான சிதம்பரப்பிள்ளை சிவராஜன் என்பவர் இவ்வழக்கின் பிராதின் 1ம் ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை பிராதின் 2ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்திற்கு காணி மாற்றம் செய்வதற்கு சட்டபூர்வமான அதிகாரம் அற்றவர் என்ற கட்டளையும், தீர்ப்பும்.

2. 25.04.2017 இல் நொத்தாரிசு கௌதமன் முன்பாக 274ம் இலக்கத்தில் முடிந்த காணி மாற்றல் உறுதி வெற்றும் வெறிதானதாகும் என்ற கட்டளையும், தீர்ப்பும்.

3. குறித்த 1ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்திலிருந்து 2ம் எதிராளியும் அவரது முகவர்கள் வேலையாட்கள், தங்குநர்கள் மற்றும் அத்தகைய தன்மை வாய்ந்த அனைவரும் வெளியேற வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

4. குறித்த 1ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக்கு மீளக் கையளிக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

5. 1ம், 2ம் எதிராளிகளால் குறித்த 1ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்தில் ஏலவே காணப்பட்டவாறு நுழைவாயிலின் பெயர் வளைவையும் கேற்றையும் குறித்த கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையும், தீர்ப்பும்.

6.வழக்கு செலவும் நீதிமன்றம் தகுதி எனக் காணும் இதர பிற நிவாரணங்களும்.

முதலாம் ஆதனடாப்பில்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்கு, பிரதேச சபை, உடுவில் பிரதேச செயலர் பிரிவு உடுவில் கோவிற் பற்று, கந்தரோடை இறை, J/200 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள "பொருக்கன் புலம்" நில.பர.9 1/2யும் கிணறும் இதில் வடக்குப் பக்கமாக குளி 14.39. இது நில அளவையாளர் M. சிற்றம்பலம் அவர்கள் 12.04.2003ல் அளந்து தயாரிக்கப்பட்ட 602ம் இலக்கப்படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குளி பதின் நான்கு தசம் மூன்று ஒன்பதுக்கும் எல்லைகள்
கிழக்கு-கந்தையா உபாத்தியாயர் வீதி.
வடக்கு-கனகசபை தேவகாந்தன் பெண் தனலட்சுமி ஆகியோரின் ஆதனம்.
மேற்கு-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் ஆதனம்.
தெற்கு-கந்தசாமி புலேந்திரன் பெண் சூரியகுமாரி ஆகியோரின் ஆதனம். இதடங்கலும்.

இரண்டாம் ஆதனடாப்பில்

மேற்படி இறை, J/200 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள "பிறக்கன் புலம்"

நில.பர.10. இதில் மேற்குப்பக்கமாக குளி 14.39

இந்த குளி பதின் நான்கு தசம் மூன்று ஒன்பதுக்கும் எல்லைகள்
கிழக்கு -மிகுதி ஆதனம்.
வடக்கு-டாக்டர் சுப்பிரமணியம் ஒழுங்கை.
மேற்கு- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக்குரிய ஆதனம்.
தெற்கு- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக்குரிய ஆதனம்.
இதடங்கலும்.

இவ்வழக்கானது 2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதியன்று திறந்த நீதிமன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க அமைப்பின் அங்கத்தவர் கள் எவராவது இவ்வழக்கில் அக்கறையுடையவராக இருப்பின் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு தனிப் பட்ட ரீதியிலோ அல்லது சட்டத்தரணி ஊடாகவோ கௌரவ மன்றில் தோன்றலாம் என இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

(6083)

வரைபு
வழக்காளிகளின்
பதிவுபெற்ற சட்டத்தரணி
(தி.கணதீபன்)

மன்றின் கட்டளைப்படி, பதிவாளர்,
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## சட்டவிரோத துப்பாக்கிகளுடன் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவனல்லை அமைப்பாளர் சட்டவிரோத துப்பாக்கிகளுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவனல்லை அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான இம்தியாஸ் காதர் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து அனுமதிப்பத்திரமற்ற மூன்று துப்பாக்கிகள் மற்றும் அதற்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை அவரது வீட்டை சோதனை செய்த போதே இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

## அறிவுத்திருக்கோவிலின் 2-ம் ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் பிறவுண் வீதியில் அமை ந்துள்ள அறிவுத்திருக்கோவிலின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா 28 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. இதில் "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்" என்னும் தலைப்பில் சொல் சேந்தர் சுகிசிவம் (தமிழ்நாடு) சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (இ)

## கலாசாரப் பெருவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி கலை மன்றத்தினால் நடத்தப்படும் "கலாசாரப் பெருவிழா" சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதனும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் வினோஜிதா கணேசநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் சர்வேஸ்வரன் தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து, மங்கள வாத்திய இசை, கர்நாடக சங்கீத இசை விருந்து ஆகியன இடம்பெறும். அத்துடன் "எங்கள் பண்பாடு படும் பாடு" என்ற தலைப்பில் கவியரங்கமும் இடம்பெறும். (இ-30)

## வைத்தீஸ்வராக் கல்லூரி வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வாணிவிழா இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் இந்து மாமன்றத் தலைவர் க.கோகிலன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தி னராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேழினி பாலேந்திரா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி க.சுந்தரேசன், யாழ். வைத்தீஸ்வ ராக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் செ.பாலச்சந் திரன், கௌரவ விருந்தின ராக பழைய மாணவர் சங்க உப செயலாளர் கலைவாரிதி செ.உதயச்சந்திரன் ஆகி யோர் கலந்து கொள்வர்.(இ)


### வேலை வாய்ப்பு

கட்டட வேலைக்கு மேசன், கூலி ஆட்கள் தரத்திலான வேலையாட்கள் தேவை.
தொடர்பு:- 076 546 5144

### மில் வேலைக்கு ஆட்கள் தேவை

மில் வேலையில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:-
077 773 3532
(6048)


## செயலாளரை சுதந்திரமாக செயற்பட விடுங்கள்

### தவிசாளரிடம் உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் செயலாளரை சுதந்திரமாக செயற்பட விட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நிதிகேசன் நகர சபை தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற சபை அமர்வின் போது தவிசாளரின் நடவடிக்கைகள் தொடர்பில்கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிர்வாகத்தை சரியான முறையில் நடத்த வேண்டும். கடந்த கால சபை போல் இல்லாமல் சிறந்த முறையில் இயங்கி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். நிர்வாகம் நடத்துபவர் செயலாளராகத் தான் இருக்க வேண்டும். செயலாளரை சுதந்திரமாக இயங்க விட வேண்டும்.

தவிசாளரா அல்லது செயலாளரா என்பதில் முதலில் தெளிவு வேண்டும். சபை நடத்துவதில் இடர்பாடு இருந்தால் அதற்கு மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மின்குமிழ் பொருத்தும் விடயத்தில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடையே நிலவிய மாறுபட்ட கருத்துக்களின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் காங்கேசன்துறை பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்-2018

**இடம்: பாடசாலை மண்டபம்**

**காலம்: 24.10.2018 புதன்கிழமை**

**நேரம்: முற்பகல் 9 மணி**

பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-4176)

தலைவர்

## NVQ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அழைப்பு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின்
வல்வெட்டித்துறை தொழிற் பயிற்சி நிலையத்தில்
தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நிறைவு செய்த
பயிலுநர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்
தங்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**பிரதம விருந்தினர்**
**திரு கு.நிரஞ்சன்**
உதவிப்பணிப்பாளர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாணம்

**சிறப்புவிருந்தினர்கள்**
**திரு S.நந்தகுமார்**
வலயக்கல்வி பணிப்பாளர் -வடமராட்சி
**கௌரவ M.K.சிவாஜிலிங்கம்**
உறுப்பினர், வடக்கு மாகாண சபை
**திரு.ஐ.பரமேஸ்வரன்**
நிர்வாக உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

**கௌரவ விருந்தினர்கள்**
**திரு.கோ. கருணானந்தராசா**
தவிசாளர்- வல்வெட்டித்துறை நகரசபை
**திரு S.செல்வேந்திரா**
உறுப்பினர்-வல்வெட்டித்துறை நகரசபை
**திரு.S.பிரசாத்**
செயலாளர்-வல்வெட்டித்துறை நகரசபை
**திரு.த.சுரேஸ்குமார்**
கணக்காளர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
**பொறுப்பதிகாரி,**
வல்வை பொலிஸ் நிலையம்.

(சி-4174)

**வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம் (VaiSWA) வல்வெட்டித்துறை**

## நவராத்திரி பூசைக்கு வைக்கப்பட்ட கும்பத்தில் இரு கண்கள் தோன்றிய அதிசயம்





வவுனியா செட்டிகுளம் ப்குதியில் உள்ள கங்கன் குளம் ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நவராத்திரி பூசைக்காக வைக்கப் பட்ட கும்பத்தில் கடவுள் உருவம் தோன்றியதாக பலரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

வவு/ கங்கன்குளம் ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நவராத்திரி 9ஆம் நாள் பூஜையின்போது கும்பத்திற்கு வைக்கப்பட்ட தேங்காயில் கண் மற்றும் முகம் ஒன்றின் தோற்றம் தெரிந்துள்ளது. குறித்த தோற்றம் சரஸ்வதியினுடையது என தெரிவித்து பாடசாலை அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் அதனை பார்வையிட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி அன்பரசி வசந்தராஜா கருத்துத் தெரிவிக்கையில்.

நவராத்திரி பூசைக்காக 9 நாட்களுக்கு முன்னர் கும்பம் வைத்தோம். அந்த கும்பத் தேங்காயில் தற்போது முகத் தோற்றம் தெரிகின்றது. அதில் இரு கண்கள் வடிவாக தெரிகின்றது. இது ஒரு நல்ல விடயம் என பலரும் தெரிவிக்கின்றனர். கடவுள் உருவம் காட்சி கொடுத்தமை மகிழ்ச்சியாகவுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியிலுள்ள வீட்டில் வாழை மரம் ஒன்றில்நடுப்பகுதியில்வாழைப் பூ தள்ளிய அதிசயமும் இடம் பெற்றுள்ளது. இவ்வாறுவழைப் பூ வாழையின் மேலிருந்தே வருவதை அவதானிக்க முடியும் ஆனால் வழமைக்கு மாறாக வாழையின் நடுப்பகுதியில் வாழைப் பொத்தி தள்ளி அப் பகுதியில் அதிசயம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு இடம்பெற்ற இரண்டு அதிசயங்களையும் அறிந்த மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (2-250-281)

# திருக்கேதீஸ்வரம் மாந்தைப் பகுதியில் இராணுவ வசமிருந்த காணிகள் பிரதேச செயலாளரிடம் கையளிப்பு





(மன்னார்)

வடக்கில் முப்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொது மக்களின் சுமார் 87 ஏக்கர் காணிகளை விடுவிக்க நேற்று முன்தினம் புதன்கிழமை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை பகுதியில் இராணுவத்தின் வசம் காணப்பட்ட 5 ஏக்கர் காணிகள் நேற்று முன்தினம் மாலை மன்னார் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலக காணி அலுவலகர் க.வசந்தன் தெரிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் வசம் இருந்த குறித்த 5 ஏக்கர் காணி சுமார் 28 வருடங்களின் பின்னர் உரிமையாளர்களிடம் கையளிக்கும் வகையில் மன்னார் பிரதேசச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த 5 ஏக்கர் காணியில் சுமார் 15 குடும்பங்களுக்கான காணிகள், திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலகர் சபைக்கான காணி மற்றும் வைத்தியசாலைக் கான காணிகள் என்பன அடங்குவதாக மன்னார் பிர தேச செயலக காணி அலுவ லகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த காணிகள் வைபவ ரீதியாக இராணுவ அதிகாரியினால் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகையிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது குறித்த பகுதிக்கான கிராம அலுவலகரும் கலந்து கொண்டிருந்ததாக மன்னார் பிரதேசச் செயலக காணி அலுவலகர் மேலும் தெரிவித்துள்ளார். (2-285)

## வவுனியா நகர சபையின் நேற்றைய அமர்வில் வாகனக் கொள்வனவு தொடர்பில் விவாதம்



வாகன நகரசபைக்கு புதிய வாகனம் ஒன்று கொள்வனவு செய்ய வேண்டும் என தவிசாளர் இ.கௌதமன் சபையில் கருத்து தெரிவித்தையடுத்து சபையில் நீண்ட விவாதம் ஏற்பட்டது.

வவுனியா நகரசபையின் இம் மாதத்திற்கான அமர்வு நேற்றுக்காலை 9 மணியளவில் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வவுனியா நகரசபையில் வாகனப் பற்றாக்குறை உள்ளதாகவும். தவிசாளர், உபதவிசாளர், செயலாளர் ஆகியோரின் பயன்பாட்டிற்கு இரு வாகனங்கள் உள்ள போதும் அதில் ஒன்று அடிக்கடி பழுதடைவதால் புதிய வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யலாம் என சபையின் கவனத்திற்கு தவிசாளர் கொண்டு வந்திருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, சபை அமர்வு கூட்ட நிகழ்ச்சி நிரலில் குறித்த விடயம் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு தெரிவிக்காத விடயத்தை உடனடியாக கொண்டு வந்து தீர்மானமாக நிறைவேற்ற முடியாது நகர சபையில் உள்ள வாகனங்களை திருத்தி பயன்படுத்த வேண்டும். மேலதிகமாக புதிய வாகனத்தை கொள்வனவு செய்து நிதியை வீண் விரயம் செய்ய முடியாது எனத் தெரிவித்தார். குறித்த கருத்தை உறுப்பினர்களான ரி.கே.இராஜலிங்கம், க.சந்திரகுலசிங்கம் ஆகியோரும் வலியுறுத்தினர்.

இதன்போது புதிய வாகனம் கொள்வனவு செய்வது என சபையின் ஒருவர் முன்மொழிந்து ஒருவர் வழி மொழிய முற்பட்ட போது உறுப்பினர்கள் சிலர் இது ஏகமனதான முடிவு அல்ல என தெரிவித்தையடுத்து வாக்கெடுப்புக்கு விடுவதா என கலந்துரையாடப்பட்டது. இறுதியில் வாகனக் கொள்வனவு தொடர்பில் அடுத்த அமர்வில் விவாதித்து தீர்மானம் எடுப்பதாக முடிவு செய்யப்பட்டது.

இதன்போது கடந்த 11 ஆம் திகதி தவிசாளர் குப்பை ஏற்றும் உழவு இயந்திரத்தில் பயணித்தமை அரசியல்நோக்கம் கொண்ட செயற்பாடு எனவும் உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)




## 'தமிழினி' சிறுகதை தொகுதி வெளியீடு

(வவுனியா)

சமரபாகு சீனா உதய குமார் எழுதிய "தமிழினி" எனும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா நிலைய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் (வவுனியா புகையிரத நிலையம் முன்பாக) நடைபெறும்.

ஆசிரிய வள நிலைய முகாமையாளர் எஸ். ஜெயச் சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை வ/நொச்சிக் குளம் கனிஷ்ட உயர் தர வித்தியாலய ஆசிரியர்வி.ரஜீன். ஆற்றுவார்.

நூலின் முதற்பிரதியை யா/ விக்னேஸ்வரா கல்லூரி பிரதி அதிபர்ந.நந்தன் பெறுவார்.

ஆய்வுரையை மு/ஒட்டுசுட் டான் மகா வித்தியாலய அதிபர் வே.முல்லைத்தீபன் நிகழ்த்துவார்.

வரவேற்புரையை யா/ ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை ஆசிரியர் த.பிறவுண்சன் ஆற்றுவார். (2)

## முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபவளாகத்தில்நடைபெறவுள்ளது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

ஆண் முதியோர்கள் வேக நடை, கூடைக்குள் பந்து போடுதல்,சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளிலும், பெண் முதியோர்கள் கிடுகு பின்னுதல், கூடைக்குள் பந்து போடுதல்,சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளிலும் பங்கேற்கவுள்ளனர்.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ள மாவட்ட முதியோர் தினவிழாவில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில்நடைபெறவுள்ள மாகாண முதியோர் தின விழாவிலும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். (2)

## 12 கிராமங்களில் புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் செயலிழப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் கீழ் உள்ள 12 கிராமங்களில் பல மில்லியன் ரூபாசெலவில் புனரமைக்கப்பட்ட ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டபோது ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

யுத்த காலத்தில் இவ்வை முழுமையாக சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

யுத்தம் முடிவுறுத்தப்பட்டு மக்கள் மீள்குடியேறியதையடுத்து செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதாவது செல்வபுரம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான், விநாயகபுரம், பாலிநகர், கறுப்பிகுளம், புகழேந்திநகர், பாரதிநகர், திருநகர், வளநகர், கொத்தம்பியாகுளம் ஆகிய பகுதிகளில் 470 விவசாயக் குடும்பங்கள் நன்மையடையக் கூடிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட 12 ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் இவ்வாறு செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன. (2-315)

## துப்பாக்கி ரவைகளுடன் ஒருவர் கைதானார்

வவுனியா - சின்னக்குளம், நேரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் கஞ்சா விற்பனை மேற்கொள்ளப்படுவதாக நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் சின்னக்குளம், நேரியகுளம் பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற செட்டிகுளம் பொலிஸார் அங்கு சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது கிணற்றின் அருகில் இருந்து ரி-56 துப்பாக்கி ரவைகள் 22 மீட்கப்பட்டுள்ளதுடன், இதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் மரியம்பிள்ளை ஜேசுதாஸ் (வயது 52) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் தான் மீன் பிடிக்க குளத்திற்கு சென்ற போது குளக்கரையில் பொதி செய்யப்பட்ட நிலையில் ரவைகள் காணப்பட்டதாகவும், அதனை தான் எடுத்து வந்து வீட்டு கிணற்றருகே வைத்ததாகவும் கைது செய்யப்பட்ட நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (2-250)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகள் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகள் போதைப் பொருள் என்பவற்றால் சிறுவர் துஷ்பிரயோகங்கள்,குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவதாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனைகள் கஞ்சாப் பயன்பாடு என்பன அதிகளவில் காணப்படுவதுடன், இதனால் இக்கிராமத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனச்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளால் சிறுவர் துஷ்பிரயோகங்கள்,இளவயது கர்ப்பம் தரித்தல், இளவயதுத் திருமணங்கள், குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எந்தவிதமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (2-315)

# உங்களுடைய பிரச்சினைகளுக்கு எங்களால் தீர்வு பெற்றுத்தர முடியும்

## வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அண்மையில் தனது மூன்று பிள்ளைகளுக்கு விஷம் வழங்கிவிட்டு தானும் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்வதற்கு முயன்றுள்ள தாயும் பிள்ளைகளும் அதிர்ஷ்டவசமாக காப்பாற்றப்பட்டனர். இதையடுத்து விஷம் வழங்கி தற்கொலைக்கு முயன்ற தாயாருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எஸ்.எம்.என்.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தற்கொலைகளுக்கு எதிராக இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்குட்பட்ட பிரிவுகளில் 13 பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்தபொலிஸ் நிலையங்களிலே கடந்த பத்து மாதங்களுக்குள் இடம்பெற்ற தற்கொலைகள் தொடர்பாக எங்களுக்கு கிடைத்த தற்கொலைகளின் எண்ணிக்கைகளின் தகவல்களின் அடிப்படையில் பெண்கள் 10 பேர், ஆண்கள் 12 பேர், மொத்தமாக 22பேர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இத் தற்கொலை செய்து கொண்டவர்களில் அதிகமானவர்கள் இளவயதினர். தற்கொலைக்கு இன்னுமொரு முறையை பயன்படுத்தியிருக்கின்றார்கள். விஷமருந்துகள் உட்கொண்டுள்ளார்கள்.

எங்களுக்கு ஆச்சரியமான விடயம் ஒன்று 14, 15, 16 வயது சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். 21 முதல் 25வயதுக்குட்பட்டவர்கள் 8பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். 31 வயதிலிருந்து 35வயதிற்குட்பட்டவர்கள் 7பேர் தற்கொலை செய்துள்ளார்கள். இந்த குறுகிய காலத்திற்குள் 22பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்கள்.

வவுனியாவில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

உங்களுக்கு என்ன பிரச்சினைகள் இருந்தாலும் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று உங்களது பிரச்சினைகளை எம்முடன் பகிர்ந்து விட்டுச் செல்லவும். இளம் வயதினரே தற்போது தற்கொலைகள் செய்து கொள்ள முயன்றுவருவது தெரிய வந்துள்ளது.

நாங்கள் அனைவரையும் எமது பிள்ளைகள் என்றே நினைத்தே கடமையாற்றி வருகின்றோம் எனவே இளம் வயதினர் நீங்கள் எங்களை உங்களது தாய்,தந்தையர்கள் என நினைத்து எம்முடன் வந்து கலந்துரையாட வேண்டும். உங்களது பிரச்சினைகளை மனம்விட்டு பேச முன்வரவேண்டும்.

அவ்வாறு வந்து உங்களுடைய பிரச்சினைகளை எம்மிடத்தில் தெரிவிக்கும் போது உங்களுக்கு எங்களால் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியும்.

முன்னர் தற்கொலை செய்து கொண்டால் தண்டப்பணம் செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால்தற்போது அவ்வாறான நிலை இல்லை. இதன் காரணமாகவே அனைவரும் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்வருகின்றார்கள்.



அண்மையில் செட்டிகுளம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்துவிட்டு தானும் விஷம் அருந்தியுள்ளார். அவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பித்துக்கொண்டார்கள். அவர்கள் மீது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (2-250)



# சனசமூக நிலையம் திறப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட இளவேனில் சனசமூக நிலைய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனின் நிதியொதுக்கீட்டின் கீழ் எட்டு இலட்சம் ரூபா செலவில் சி.செல்லத்துரையின் காணி அன்பளிப்புடன் மாணிக்கபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த புதிய கட்டட திறப்பு நிகழ்வு இளவேனில் சனசமூக நிலையத்தலைவர் தே. சந்திரமேனன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந், பிரதேச சபை உறுப்பினர்கள்,புதுக்குடியிருப்பு பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் விக்டா ஜெயசிங்கம் மற்றும் கிரிசலீஸ் அணித் தலைவர் ம.பிரபாகரன்,கிராம அலுவலகர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

சனசமூக நிலைய கட்டடத்தை வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் நாடாவை வெட்டி திறந்து வைக்க பெயர்ப்பலகையை செ.பிறேமகாந் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து நினைவுச் சின்னத்தை சனசமூக நிலையம் அமைப்பதற்கு காணியை அன்பளிப்பு செய்த சி.செல்லத்துரை தம்பதிகள் திரை நீக்கம் செய்துவைத்துள்ளார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் கிராமத்தில் சேவையாற்றி மாற்றம் பெற்ற கிராம அலுவலகர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (2-281)

## உலக உளநல தினத்தை முன்னிட்டு

# தற்கொலைகளை தடுப்பது தொடர்பான கருத்தரங்கு



(குருமன்காடு)

உலக உளநல தினதிதை முன்னிட்டு தற்கொலைகளை தடுப்பது தொடர்பான கருத்தரங்கு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபை இணைந்து ஏற்பாடு செய்த இந்த கருத்தரங்கு நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எஸ்.எம்.என்.தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான ஆயர் பி.என்.இராஜசிங்கம், வவுனியா வைத்தியசாலையின் உள நலப்பிரிவு வைத்தியர், வவுனியா வைத்தியசாலையின் சிரேஷ்ட உளநலப்பிரிவு வைத்தியர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத்தலைர், வவுனியா வடக்கு பிரதேச சபைத்தலைவர், உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியாவில் முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் பாடசாலைகள், கிராமங்கள் என தொடர்ந்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

உளநல வைத்தியர்களின் ஆலோசனைகள், சிறப்புக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளதுடன் தற்கொலை தொடர்பான விழிப்புணர்வுகள், ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளன. (2-250)

# வவு.பொது வைத்தியசாலை வளாகத்தில் மரநடுகை நிகழ்வு





(பனிக்கன்குளம்)

மரநடுகை மாதத்தை முன்னிட்டு பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், வைத்தியசாலை போன்ற இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் நாட்டி வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முற்பகல் 10.30மணியளவில் வவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியர் சுரேந்திரனால் வைத்தியசாலை வளாகத்தில் மரம் நடுகை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா பொது வைத்தியசாலை வளாகத்தில் மரம் நாட்டுவதற்கு வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியரிடம் வவுனியாவிலுள்ள வர்த்தகர் என். எஸ். ரட்ணத்தினால் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# தேசிய பனம் விதை நடுகைத்திட்டம் பல்லவராயன் பனங்சமூக்காட்டில்

(சிவநகர்)

யாழ்.இந்துக் கல்லூரி க.பொ.த. உயர்தர 1991 ஆம் ஆண்டு மாணவர் அணியின் நெறிப்படுத்தலில் கிளிநொச்சி மாவட்ட உளநல அணியினர் பூநகரி பிரதேச செயலகம் பூநகரி பிரதேசசபை, கிளிநொச்சி மாவட்ட மற்றும் பிரதேச மக்கள் செயலகம் இணைந்து முன்னெடுக்கவுள்ள தேசிய பனம் விதை நடுகைத்திட்டம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு பூநகரி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல்லவராயன் பனங்சமூக்காடு எனும் இடத்தில் 50 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்படவுள்ளன.

மீள நடுகை பராமரிப்பு உட்பட தொடர் ஐந்து வருடங்கள் பராமரிப்பு மற்றும் மூன்று மாத தொடர் கள ஆய்வு, நேரடி விஜயங்கள், நிபுணத்துவ ஆலோசனைகள், பனை விதை சேகரிப்பு அனுமதிகள் என்பன இடம்பெறும்.(2-254)

# சிறப்புச் சொற்பொழிவு

(கிளிநொச்சி)

ஆன்மீக சொற்பொழிவாளரும் சைவப்புலவருமான "சொல்வேந்தர்" பொன். சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(2)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2018-16.11.2018

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கண்டகச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. 2இல் ராகு 8இல் கேது இருந்து காலசர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். எனவே எதையும் கொஞ்சம் யோசித்துச் செய்ய வேண்டிய நேரமாகவே இருக்கின்றது. பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படாது என்றாலும், மனநிம்மதி குறைவாகவே இருக்கும். சில காரியங்களை அரை குறையாகவே செய்யும் சூழ்நிலையும் உருவாகலாம். சிலகாரியங்களை சரிவர முடித்தும் அதற்குரிய ஆதாயம் கிடைக்காமல் போகலாம். திட்டமிட்ட காரியங்கள் நடைபெறவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

அஷ்டமத்தில் செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குறிப்பாக எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. மற்றவர்களுக்கு பொறுப்புச்சொல்லி ஏதேனும் ஒரு தொகை வாங்கிக் கொடுத்தால் அதன் மூலமும் பிரச்சினைகள் உருவாகலாம். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது எதைச் செய்தாலும் முன்யோசனையுடன் செய்வது நல்லது. இல்லாவிட்டால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். எனவே எப்போதும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது தான் நல்லது.

2இல் ராகு இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் இருக்கும் கேதுவால் அலைச்சல் அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்குமா என்று உறுதி சொல்ல இயலாது. மற்றவர்களை நம்பி நீங்கள் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். சகாய ஸ்தானத்தில் சூரியன் நீச்சம் பெற்றிருக்கின்றார். இருப்பினும் அவரோடு புதனும், சுக்ரனும் இணைந்து புத-ஆதித்ய யோகம் மற்றும் புத-சுக்ர யோகத்தை கொடுப்பதால், கல்வியில் இருந்த தடை அகலும். கட்டடம் கட்டும் வாய்ப்பு உருவாகும். பூர்வீகச் சொத்துகளை பஞ்சாயத்துகள் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டு, அதற்கு இணையான சொத்துகள் வாங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். ஏற்றமும், இறக்கமும் இல்லாத வாழ்வு அமைய சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் உங்களுக்கு கைகொடுக்கும். யோகபலம் பெற்ற நாளில் காலசர்ப்ப தோஷ நிவர்த்திக்கு, அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று முறையான பரிகாரங்களைச் செய்து வருவது நல்லது. மேலும் கண்டகச் சனியின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட அருகில் இருக்கும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

### விருச்சிக புதன் சஞ்சாரம்

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் செல்கிறார். இராசிநாதனாகவும், நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் 6இல் சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்களை வாரி வழங்குவார். குறிப்பாக வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். வாகனம் வாங்குவதில் மும்முரம் காட்டுவீர்கள். திறமை பளிச்சிடும் நேரமிது. தாய்வழி ஆதரவுகூடும். நோய்-நொடியில் நிவாரணம் பெறுவீர்கள். இதுவரை பழைய கடன்களை அடைக்கப் புதிய கடன் வாங்கிய நீங்கள், இப்பொழுது முழுக்கடன்களையும் அடைக்க எடுத்த முயற்சி பலன் தரும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். தொலைதூரத்தில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள். வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு சொந்த வீடுகட்டிக் குடியேறும் யோகம் கூட உருவாகலாம்.

### கும்பச் செவ்வாய் சஞ்சாரம்

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்பத்திற்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். அஷ்டமத்து குருவால் அலைச்சல்களையும், ஆதாயக் குறைவையும் கண்டு வந்த நீங்கள் இனி மகிழ்ச்சியில் திளைக்கப் போகிறீர்கள். குறிப்பாக பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உருவாகும். தந்தை வழியில் ஏற்பட்ட விரிசல் சரியாகும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகளும், பொறுப்புகளும் கிடைக்கும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். தொண்டர்கள் உங்கள் தலைமையின் கீழ்பணியாற்ற விரும்புவர். மேலிடத்து நிர்ப்பந்தம் அகலும்.




### புதன் வக்கிர இயக்கம்

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வக்கிர இயக்கமாகச் செல்கிறார். அங்கு நீச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே இந்த வக்கிர காலம் உங்களுக்கு வளர்ச்சி கூடும் காலமாகவே அமையும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பீர்கள். பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் சிறப்பாக நடைபெறும். ஆடை, ஆபரணங்களை வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க முன் வருவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள்கூட கோபத்தைக் குறைத்துக் கொண்டு மீண்டும் உங்களுடன் இணைந்து பணிபுரிய விரும்புவர். வியாபாரத்தில் அதிரடி மாற்றங்களைச் செய்வீர்கள். முரண்டு பிடித்த பணியாளர்களை மாற்றுவீர்கள். முக்கியப் புள்ளிகளால் உங்கள் முன்னேற்றம் கூடும். இக்காலத்தில் குரு வழிபாடும், சனி வழிபாடும் உங்களுக்கு அவசியம் தேவை. சரஸ்வதி பூஜையன்று கலைவாணி கவசம் பாடி, சரஸ்வதி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கந்த சஷ்டி அன்று கந்தப்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் சனியின் பார்வையால் விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் நிகழலாம். குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். தொழில் முன்னேற்றம் உண்டு. என்றாலும் தொகை வந்த மறு நிமிடமே செலவாகலாம். கணவன் - மனைவிக்குள் அப்போதைக்கப்போது ஏற்பட்ட பூசல்கள் மாறி, முடிவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்கும் வாய்ப்பு கிடைக்கும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கால்நடை வளர்ப்பில் கவனம் செல்லும். பணிபுரியும் பெண்களுக்கு இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். ஒருசிலருக்கு உயர்பதவிகள் கிடைக்கலாம். வியாழக்கிழமை குரு வழிபாட்டையும், கந்தசஷ்டி விழாக் காலத்தில் முருகப் பெருமான் வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால் முன்னேற்றத்தின் முதற்படிக்குச் செல்லலாம்.

## உத்தியோகத்தில் பணி நிரந்தரம்!



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குரு பகவான் 9ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கிறார். ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பதால், குருவின் சிறப்பு வாய்ந்த 9ஆம் பார்வையால் உன்னத பலன்கள் உங்களுக்கு வந்து சேரப் போகிறது. தொட்டது துலங்கும். தொடர்கதையாய் வந்த கடன் சுமை குறையும். தொழில் வளர்ச்சிக்குத் துணையாக இருப்பவர்கள் கைகொடுத்து உதவுவார்கள். சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். கௌரவப் பதவிக் கிடைக்கும். கணிசமான தொகை கைகளில் புரண்டு கொண்டே இருக்கும். தனாதிபதி சூரியன் நீச்சம் பெற்றிருந்தாலும், சுக்கிரனோடு இணைந்து நீச்சபங்க இராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே வருமானத் தடைகள் அகலும். இதுவரை எத்தனையோ நல்ல நல்ல திட்டங்கள் தீட்டியும் செயற்படுத்த முடியவில்லையே என்று கவலைப்பட்ட உங்களுக்கு இம்மாதம் அரசாங்க ஒத்துழைப்பும் கூடுதலாகக் கிடைத்து மகிழ்ச்சியடையப் போகிறீர்கள்.

மாதத் தொடக்கத்தில் 6இல் சனி இருப்பது ஒரு வழிக்கு நன்மை தான். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி 6இல் இருக்கும் பொழுது, விபரீத ராஜயோகத்தின் அடிப்படையில் எதிர்பாராத நற்பலன்கள் இல்லம் தேடிவரப்போகிறது. உதிரி வருமானங்கள் பெருகும். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் உயர்பதவிகளும், ஊதியத்தில் உயர்வுகளும் கிடைக்கலாம். மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். சந்திர-மங்கள யோகமும் இருப்பதால் பல மாதங்களாக தள்ளிப்போன திருமணம் கைகூடும்.

மாதத் தொடக்க நாளில் சரஸ்வதி பூஜை வருகின்றது. அதற்கு மறுநாள் விஜயதசமி வருகின்றது. நவம்பர் 13ஆம் திகதி கந்த சஷ்டி விழா வருகிறது. இந்த மூன்று விழாக்களையும் முறையாகக் கொண்டாடி வழிபட்டால் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

### விருச்சிக புதன் சஞ்சாரம்

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். 3, 12இற்கு அதிபதியான புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி ஒருபெரும் தொகையை செலவழிக்கும் சூழல் உருவாகும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். பூர்வீகச் சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் அகலும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

### கும்ப செவ்வாய் சஞ்சாரம்

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. நரம்பு எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். கூட்டு முயற்சியில் இருந்து தனித்து இயங்க முற்படுவீர்கள். கூட்டாளிகளால் ஒருசிலர் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றம், வீடு மாற்றம், இலாகா மாற்றம் போன்றவை திடீரென வரலாம். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறையும்.




### புதன் வக்கிர இயக்கம்

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். 3, 12இற்கு அதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு கிடைக்கும். இழந்த செல்வாக்கை மீண்டும்பெறுவீர்கள். இலாபம் திருப்திகரமாக வந்துசேரும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். பழைய பிரச்சினைகள் ஒவ்வொன்றாக பைசலாகும். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட சலுகைகளை மேலதிகாரிகள் செய்து கொடுப்பார்கள். இம்மாதம் ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால், துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வதோடு நாகசாந்திப் பரிகாரத்தையும் மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் தீரும். கல்யாணக் கனவுகள் நனவாகும். நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட வீண் விவகாரங்களில் இருந்து விடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவை வாங்க எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாழக்கிழமை தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வதோடு நவராத்திரி நாயகி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

சூரசம்ஹாரத்தன்று விரதமிருந்து சுப்பிரமணியரை வழிபடுவதன் மூலம் தொடர்ந்து நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

## பணவரவு திருப்தி தரும்!

(தொடரும்)

# வடக்கு மாணவர்களுக்கான பிரமாண்ட போட்டி நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மாணவர்களின் பல்துறைசார் திறன்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட **"Anchor Students with Talent"** பிரமாண்டமான போட்டி நிகழ்வு வெற்றிகரமாக இடம்பெற்று முடிந்துள்ளது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு , மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள மொத்தமாக 300 பாடசாலைகளை சேர்ந்த 1500 க்கும் மேற்பட்ட போட்டியாளர்களை உள்ளீர்த்து இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில்வடமாகாண மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இந்நிகழ்வானதுமாணவர்களின் திறமைகளையும் அனுபவத்தையும் வெளிக்காட்டுவதற்கான மிகப்பெரிய போட்டி களமாக நடைபெற்று முடிந்தது.

இந்த போட்டி நிகழ்ச்சி கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி யாழ். இந்து கல்லூரியில் அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் ஆதரவுடன் ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து, கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போட்டி தேர்வில் அதிகப்படியான மாணவர்கள் கலந்து கொண்டு அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

அடுத்தபடியாக, முல்லைத்தீவு மாணவர்களுக்கான போட்டி நிகழ்வுகள் கடந்த செப்டெம்பர் 23 ஆம் திகதி முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கு இடம்பெற்ற போட்டிகளிலும் பெரும் திரளான மாணவர்கள் கலந்து கொண்டு போட்டி நிகழ்வுகளை சிறப்பித்திருந்தனர்.

பின்னர் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளில் அதிகளவி லான மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

இவற்றைத் தொடர்ந்து முதற்கட்ட சுற்றில் வெற்றியாளர்களாக தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அரையிறுதி மேடை ஒக்டோபர் 6 திகதி கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் மிகச் சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

அரையிறுதி சுற்றில் இருந்து இறுதி மேடைக்கு தெரிவாகி நடுவர்களின் தீர்ப்போடு யாழ்.மாநகர சபை மைதானத்தில் கூடியிருந்த சுமார் 4000 க்கும் மேற்பட்ட மக்களின் பேராதரவுடன் 18 மணவர்கள் வெற்றியீட்டியிருந்தனர்.

அந்தவகையில்

இசை - கீழ்ப்பிரிவு

கோபிக்கா சிவயோகராஜா - எல்/அஹரார் மகா வித்தியாலயம், குமரதாஸ் குருக்கள் விஸ்வ சுந்தர சர்மா - யாழ்.அருணோதயா கல்லூரி, ரிதுஷன் -வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்

இசை- மேல்பிரிவு

சி.திலக்சன் - மன்னார் சென்சேவியர் ஆண்கள் கல்லூரி, கிருஷிக்கா செல்வராஜ் - கே/பாரதி வித்தியாலயம், சஞ்சிக்கா சுகுமார் - யாழ். மகாஜன கல்லூரி

நடனம் -கீழ்ப்பிரிவு

விஷாலி தயாலன் - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, எம்.கிஷோன் - யாழ். சென் பெட்ரிக் கல்லூரி, பிஜோன்சி கிளிங்டா - முல்லைத்தீவு முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

நடனம் -மேல்பிரிவு

என்டனி ஜெகன் ஜகார்த்தனன் -முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம், ஆர்.சகானா - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், ராஜிவன் ஜெயனீஷன் - யாழ்.இந்து கல்லூரி

தொழில்நுட்பம்-கீழ்ப்பிரிவு

சுந்தரலிங்கம் பிரணவன் -கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சிவதாசன் அபிஷான் - வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், ஜெனோ திருக்குமரன் - யாழ். கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்

தொழில்நுட்பம்-மேல்பிரிவு

சண்முகநாதன் சகன்ராஜ் - தட்சண்ா மருதமடு மகா வித்தியாலயம், விஜயரட்ணம் விஜிதரன் - ஆவரங்கல் நடராஜா இராமலிங்க வித்தியாலயம், ராஜலிங்கம் தஸ்மி - இளவாலை மெய்கண்டன் மகா வித்தியாலயம் ஆகியோர் வெற்றியீட்டியிருந்தனர்.

தென்னிந்திய இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியுடன் போட்டி இறுதி நிகழ்வு நிறைவடைந்தது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் .க. சர்வேஸ்வரன், வடமாகாண கல்வி பணிப்பாளர், எஸ். உதயகுமார்,விசேட விருந்தினராக இலங்கைக்கான அங்கர் கிளை முகாமையாளர் திலிப் பத்திரன, வொண்டேரா நிறுவன ஊடக முகாமையாளர் பத்மபிரியன் சுதந்திரராஜன், திருமதி சத்திக்கா,பிராண்ட்ஸ் ஊடகத்துறை சார் விக்ரம சிங்க சந்தனுவன் பெரேரா மற்றும் பவித்ரா சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# இலங்கைத் தமிழ் அரசியல் 'இன மோதலும் மிதவாதமும்' நூல் வெளியீட்டு விழா இன்று



(யாழ்ப்பாணம்)

கலாநிதி கந்தைய சர்வேஸ்வரனின் இலங்கைத் தமிழ் அரசியல் "இனமோதலும் மிதவாதமும்" நூல் வெளியீட்டு இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமாலை 4 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் க.அருந்தவராஜா தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் க.பிறேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், கௌரவ விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதில் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும் நூல்வெளியீட்டு மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கமும் ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி க.சர்வேஸ்வரனும் வழங்குவர். (இ)

# நட்டம்; குத்தகைக்கு எடுத்தவரால் சந்தையை நடத்த முடியவில்லை



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கான பொதுச் சந்தை குஞ்சர்கடை அந்திரான் பகுதியில் உள்ளது.

சுகாதாரச் சீர்கேட்டுடன் உள்ள குறித்த சந்தைக்கு வியாபாரிகள்,பொதுமக்கள் செல்வது இல்லை. இதனால் 2018 ஆம் ஆண்டு சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார்.

ஆனால் பிரதேசசபை எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் சந்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச்சந்தை உரிய முறையில் இயங்கினால் பொதுமக்கள் மரக்கறி வகைகளை நெல்லியடி செல்லாமல் இலகுவாக வாங்கிக்கொள்ள முடியும் என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-60)

# மண்ணுடன் வந்த ஹன்டர் மதிலுடன் மோதியது

## சாரதி தப்பியோட்டம்





(கரணவாய்)

சட்டவிரோதமாக மண் கடத்தப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் மாலுசந்திப் பகுதியில் மறைந்திருந்த போது ஹன்டர் வாகனம் வருவதை அவதானி பொலிஸார் வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டினர்.

இருப்பினும் வாகனத்தை நிறுத்தாது திக்கம் நோக்கி செலுத்தினர்.

செலுத்திய வாகனம் மின் கம்பத்துடன் மோதுண்டு பின்னர் வீட்டு மதிலுடன் மோதி விபத்தில் சிக்கியது. இதையடுத்து சாரதி தப்பியோடியுள்ளார். (இ-60)

# பொது மைதானத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொது மைதானத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொது மைதானத்தை மண் நிரப்பி மட்டப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதற்கு பிரதேச செயலகத்தின் ஊடாக மிருசுவில் பகுதியில் மண்ணும் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. மைதானத்தை மட்டப்படுத்துவதற்கு தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் 15 இலட்சம் ரூபாயை கொடுக்க முன்வந்துள்ளது. ஆகவே நாம் அதற்கான வேலைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்துவதற்கு மைதானத்தின் மேற்குப் பக்கமாக உள்ள வயல் காணியை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதன் உரிமையாளர் யார் எனக் கண்டுபிடித்து காணியை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது மைதானத்தின் வடக்கு பகுதியில் உள்ள பார்வையாளர் களரியை மேற்குப் பக்கமாக அமைக்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# தீவகத்தில் கடலட்டை வளர்ப்பு தொடர்பில் டக்ளஸ் எம்.பி.தலைமையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட விரும்பும் துறைசார் தொழிலாளர்களுக்கான விசேட செயலமர்வு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.



நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற குறித்த செயலமர்வின்போது அனலைதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, வேலணை போன்ற பகுதிகளில் கடலட்டை வளர்ப்பதில்உள்ள சாதக பாதகங்கள் தொடர்பில் தேசிய நீர்வாழ்உயிரின அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் நிருபராஜ் விளக்கமளித்தார்.

இதன்போது குறித்த கடலட்டை வளர்ப்பு அதன் அறுவடை தொடர்பிலும் சந்தைப்படுத்தல் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டதுடன் அத்துறையை மேற்கொள்ளவுள்ள தொழில் துறைசார் தரப்பினர் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# பாரதம்

## ஒடிசாவில் டிட்லி புயல் உயிரிழப்பு 55 ஆக உயர்வு




(ஒடிசா)

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில். வீசிய டிட்லி புயல் மற்றும் மழை வீழ்ச்சியினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 55 ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி வங்கக் கடலில் உருவான டிட்லி புயல், ஒடிசாவின் கோபால்பூருக்கும் ஆந்திராவின் கலிங்கப்பட்டினத்துக்கும் இடையே கரையை கடந்தது. இதனையடுத்து அங்கு ஏற்பட்ட பலத்த காற்றுடன் மழை வீழ்ச்சிப் பதிவானது.

இதனால் வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், போக்குவரத்தும் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவும் பல பகுதிகளில் ஏற்பட்டது.

இந்நிலையில், நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை இன்று 52 ஆக உயர்ந்துள்ளதுடன் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் சுமார் 2200 கோடி ரூபாய் என முதல்கட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் மற்றும் மாநில மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## சவுதி ஊடகவியலாளர் மாயம்
## வர்த்தக உடன்படிக்கையை ரத்து செய்த நெதர்லாந்து

(ஆம்ஸ்டர்டாம்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி காணாமற்போன விவகாரத்தினால் சவுதி அரேபியாவுடன் எதிர்வரும் மாதம் வர்த்தக உடன்படிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ள நெதர்லாந்து தனது ஒப்பந்தத்தை நேற்று வியாழக்கிழமை இரத்துச் செய்துள்ளது.

தற்போது துருக்கியினதும் ஊடகங்களினதும் குற்றச்சாட்டிற்கும் உலக நாடுகளின் கவனத்திற்கும் உட்பட்டுள்ள சவுதி அரேபியாவுடனான அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் இடைநிறுத்திக் கொள்வதாகவும் அரசாங்கப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியை ஊடகங்களுக்கு அரசாங்க பேச்சாளர் அறிவித்து சில நிமிடங்களில் நெதர்லாந்து நிதிய மைச்சர் வொப்கே ஹொயெக்ஸ்ரா எதிர்வரும் வாரம் சவுதி அரேபிய நாட்டில் இடம்பெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக காணாமற்போன ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியை சவுதி திட்டமிட்டு கொலை செய்து உடலை மறைத்துள்ளதாக துருக்கி அரசாங்கம் மேற்கொண்ட குற்றச்சாட்டை சவுதி முற்றாக மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## வியட்நாமின் பிரபல எழுத்தாளர் விடுதலை!

(வியன்னா)



மதர் மஷ்ரூம் (Mother Mushroom) என பிரபலமாக அறியப்படும் வியட்நாமிய எழுத்தாளர் அந்நாட்டு அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை ஏற்படுத்தக்கூடிய பிரசாரத்தில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டி கடந்த 2017 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட குற்றச்சாட்டில் அவருக்கு பத்து வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலிடப்பட்டது.

இந்நிலையில், வியட்நாம் அரசாங்கத்திற்கு அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஜிம் மெட்டிஸ் அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து. நேற்று முன்தினம் புதன்கிழமை மதர் மஷ்ரூம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க அகதியான மதர் மஷ்ரூம் விடுதலை செய்யப்பட்டு சில மணிநேரங்களிலேயே தனது தாய் மற்றும் இரு குழந்தைகளுடன் அமெரிக்காவின் டெக்சாஸைச் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## சபரி மலைக்கு பெண்கள் செல்வது பாராட்டத்தக்க விடயம் இல்லை
### பொன்.ராதாகிருஷ்ணன் கூறுகிறார்

(பம்பை)

சபரிமலைக்கு பெண்கள் செல்லக் கூடாது என்பது நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் விடயம் என்றும், தற்போது பெண்கள் செல்ல விரும்புவது பாராட்டத்தக்க விடயம் அல்ல என்றும், மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கரூரில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்படி கூறியுள்ளார். இதன் போது மேலும் கூறிய அவர்,

"குறித்த ஆலயத்திற்கு பெண்கள் செல்லக்கூடாது என்பது மரபு. அதற்கு ஆன்மீக ரீதியாக பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆகவே அதையும் கடந்து உள்ளே செல்லும் பெண்களை பாராட்ட முடியாது.

பெண்கள் செல்லக்கூடாது என்று நிலக்கல்லடியில் பெண்களே ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்கள் ஏன் போராடுகிறார்கள் என்பது குறித்து அவர்களிடம் ஊடகவியலாளர்கள் வினவ வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

சபரிமலை ஆலயத்திற்கு 55 வயதிற்கு உட்பட்ட பெண்கள் செல்லக் கூடாது என்பது வழக்கம். ஆனால் இது பாலின வேறுபாட்டை காட்டுவதாக கூறி, கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் உச்சநீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் பிறப்பிக்கப்பட்டது. அதில் அனைத்து வயதுடைய பெண்களும் செல்லலாம் என்று உத்தர விடப்பட்டது. இந்நிலையில், குறித்த தீர்ப்பிற்கு அமைவாக பெண்கள் ஆலயத்திற்கு செல்கின்றனர். எனினும் அவர்கள் செல்லக் கூடாதென ஆலயத்திற்கு செல்பவர்களின் கால்களில் வீழ்ந்து போராட்டகாரர்கள் மன்றாடுகின்றனர். இவ்வாறான நிலையில் அமைச்சர் ராதாகிருஷ்ணன் மேற்படி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்காவைப் புரட்
## பலி எண்ணிக்கை 4

(வோஷிங்டன்)



அமெரிக்காவின் புளோரிடா, விர்ஜினியா, வடக்கு கரோலினா, ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களை சூறையாடிய மைக்கேல் புயலுக்கு பலியானோர் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் பல பகுதிகளில் அண்மைய நாட்களாக புதுப்புது புயல்கள் மற்றும் சூறாளி காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது.

அந்த வகையில், கடந்த வாரம் புதிதாக உருவான 'மைக்கேல்' புயல் மணிக்கு சுமார் 250 கிலோமீற்றர் வேகத்தில் புளோரிடா மாகாணத்தை கடந்தபோது கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது. அங்கிருந்து மெல்ல நகர்ந்து விர்ஜினியா மாநிலத்துக்குள் நுழைந்த 'மைக்கேல்' அங்கும் பெரும் சேதம் உண்டாக்கியது.

பின்னர், வடக்கு கரோலினா,

ஜோர்ஜியா
சூறையாடி

## ரஷ்யாவுடன் இ
## கிரிமியாவில் கு
## 20 பேர் உயி

(மொஸ்கோ)



உக்ரைனில் இருந்து பிரிக்கப்பட்டு ரஷ்யாவுடன் இணைந்த கிரிமியாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

1991இல் சோவியத் யூனியன் உடைந்தபிறகு. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2014இல் உக்ரைன் நாட்டின் கிரிமியா பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

உக்ரைன் விவகாரத்தில் கிரிமியா பகுதி மக்கள் அவர்களின் விருப்பத்தின் பேரிலேயே தங்கள் நாட்டுடன் இணைந்ததாக ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டா

லும், இவ்விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் எதி
வருகிறது.

எனினும், ரஷ்யாவின் முக்கிய நகரங்களில் ஓ

## டாஸ்மானியாவில் நாய்கள் கடித்து 58 பெங்குயின்கள் உயிரிழப்பு!

(டாஸ்மானியா)

அவுஸ்திரேலியாவிற்கு தெற்காகவுள்ள டாஸ்மானியா தீவில் 58 பெங்குயின்கள் கூரிய பற்களைக் கொண்ட நாய்களால் கடிக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

டாஸ்மானியா தீவின் வடக்குக் கடலோரப் பகுதியில் இந்த பெங்குயின்கள் இறந்து கிடந்ததைப் பார்த்த பொதுமக்களில் ஒருவர் வனவிலங்குத் துறையினருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

அங்கு இறந்து கிடந்தவை உள்ளூர் வகையான, லிட்டில் பெங்குயின் எனப்படும் சிறிய வகை பெங்குயின்களாகும்.

இந்த வகை பெங்குயின்கள் கடந்த சில மாதங்களில் இரண்டாவது முறையாக இவ்வாறு உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாய் உரிமையாளர்கள் தங்கள் செல்லப் பிராணிகளை கட்டுப்பாடாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், வளர்ப்பு நாய்களின் இதுபோன்ற செயல்களுக்கு அவற்றின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அதிகாரிகள் முன்பு எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## வனவ
## விருத



(லண்டன்)

2018 ஆம் ஆ
வனவிலங்கு ஒ
கான விருது வழ
லண்டனில் அ
ற்கை வரலாற்று
யகத்தில் இடம்பெ
நெதர்லாந்தை

# வெளிநாடு



# ...புரட்டிப்போட்ட புயல் ...க 40 ஆக உயர்வு



ஜோர்ஜியா ஆகிய மாநிலங்களை சூறையாடிய மைக்கேல் புயலுக்கு பலியானோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது. (7)

# சவுதி ஊடகவியலாளர் கொல்லப்பட்டது உறுதியென்றால் ஆதாரத்தை சமர்ப்பிக்கவும்

## துருக்கியிடம் அமெ. ஜனாதிபதி கோரிக்கை

(ரியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டதற்கு உறுதியான ஆதாரங்கள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு அமெரிக்க அரசாங்கம் துருக்கியைக் கேட்டுக் கொண்டுள்ளது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரத்திலுள்ள சவுதி தூதரகத்தில் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டாரென துருக்கி தெரிவித்தமைக்கு காணொலி அல்லது ஏதேனும் உறுதியான ஆதாரங்களை வெளிப்படுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பின்போது, அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய அரசாங்கமே குறித்த கொலையை மேற்கொண்டுள்ளது என துருக்கி உறுதியாக குறிப்பிடுமிடத்து அதற்கான ஆதாரங்களை வழங்குவது உவப்பானதென ட்ரம்ப் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்நிலையில், சவுதி அரேபியா மீது உலக நாடுகளின் ஊடகங்களும் துருக்கியும் சுமத்திவரும் குற்றச்சாட்டை சவுதி அரசாங்கம் முற்றாக மறுத்துவருவது குறிப்பிடத்தக்கது. (7)

# சவுதி ஊடகவியலாளர் மாயம்; மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவு




(ரியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி மாயமான விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சவுதி மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளார்.

வோஷிங்டன் போஸ்ட் நாளிதழின் சவுதி அரேபிய ஊடகவியலாளராக பணியாற்றி வந்த ஜமால் கஷோக்கி, அந்நாட்டு மன்னர் சல்மானின் ஆட்சியைப் பற்றி கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 2 ஆம் திகதி துருக்கி நாட்டின் இஸ்தான்புல்லிலுள்ள சவுதி அரேபியத் தூதரகத்திற்குச் சென்ற அவர் அதன் பின்னர் மாயமானார்.

இந்நிலையில் அந்த ஊடகவியலாளரை சவுதி அரேபிய தூதரக அதிகாரிகள் 15 பேர் சேர்ந்து சித்திரவதை செய்து கொன்றதாக துருக்கி அரசு ஆதரவு பத்திரிக்கையான யானி சாபக் தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்த விவகாரம் குறித்து விசாரணை செய்வதற்காக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோவை ஜனாதிபதி ட்ரம்ப் சவுதி அரேபியாவுக்கு அனுப்பிவைத்தார்.

மைக் போம்பியோ நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின் ஜமால் கஷோக்கி மாயம் ஆனது தொடர்பான விசாரணைக்கு சவுதி மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளார். (7)

# ...ன் இணைந்த ...குண்டுவெடிப்பு ...உயிரிழப்பு




...நாடுகளின் எதிர்ப்பு அதிகமாகவே இருந்து

...நகரங்களில் ஒன்றாக கிரிமியாவை அந்நா

...ட்டு மக்கள்கருதி வருகின்றனர்.

இந்நிலையில், கிரிமியாவில் கருங்கடலையொட்டியுள்ள கிழக்கு பகுதியான கெர்ச் நகரில் உள்ள தொழில்நுட்ப கல்லூரியில் நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 18 பேர் உயிரிழந்ததாகவும் சுமார் 40 பேர் காயமடைந்ததாகவும் முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

குண்டுவீச்சு தாக்குதலில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும், அதே கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூடுதான் காரணம் எனவும் ரஷ்ய ஊடகங்கள் மாறி மாறி செய்தி வெளியிட்டு வருகின்றன. (7)

# வெனிசுவெலாவில் 7 சடலங்கள் கண்டெடுப்பு!

(வெனிசுவெலா)

வெனிசுவெலாவின் தங்கச்சுரங்கத்திற்கு அருகிலுள்ள கிராமப்பகுதியில் ஏழு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்கு வெனிசுவெலாவின் தங்கச்சுரங்கத்திற்கு அருகிலுள்ள காடொன்றில் அந்நாட்டு இராணுவ வீரர்களினால் ஏழு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

வெனிசுவெலா நாட்டில் வறுமை காரணமாக சட்டவிரோதமாக தங்க அகழ்வுகள் மேற்கொள்வதினாலேயே இவ்வாறான உயிரிழப்புக்கள் அதிகம் இடம்பெறுவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், குறித்த பகுதியில் வாழும் மக்களின் சட்டவிரோத தங்க அகழ்வைத் தடுக்க அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் காரணமாகவே இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இராணுவ அதிகாரிகளின் மீது மக்களால் மேற்கொள்ளப்பட்ட குறித்த குற்றச்சாட்டிற்கு இராணுவ அதிகாரிகள் இதுவரை பதிலளிக்காமை குறிப்பிடத்தக்கது. (7)

# வனவிலங்குகளைப் படம்பிடித்து விருது பெற்ற ஒளிப்படக் கலைஞர்





(லண்டன்)

2018 ஆம் ஆண்டின் சிறந்த ...னவிலங்கு ஒளிப்படங்களுக்...ன விருது வழங்கும் நிகழ்வு ...ண்டனில் அமைந்துள்ள இய...க வரலாற்று அருங்காட்சி...த்தில் இடம்பெற்றது.

நெதர்லாந்தைச் சேர்ந்த **Marsel van Oosten** என்பவரால் எடுக்கப்பட்ட ஒளிப்படம் சிறந்த வனவிலங்கு ஒளிப்படத்துக்கான விருது பெற்றது.

இந்தப் ஒளிப்படம் சீனாவில் கின்லிங் மலைப்பகுதிகளில் வாழ் கின்ற இரண்டு அரிய வகைக் குரங்குகளுடையதாகும்.

இந்த ஆண்டின் சிறந்த இளம் ஒளிப்படக் கலைஞருக்கான விருது 16 வயதான Skye Meaker என்பவருக்கு அவருடைய உறக்கத்திலிருந்து எழும்புகின்ற சிறுத்தை ஒன்றின் ஒளிப்படத்துக்காக வழங்கப்பட்டுள்ளது. (7)

# பிரமோஸ் ஏவுகணைக்குப் போட்டியாக சீனாவில் சுப்பர்சொனிக் ஏவுகணை சோதனை






(பீஜிங்)

இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'பிரமோஸ்' ஏவுகணைக்கு போட்டியாக சீனா சுப்பர்சொனிக் ஏவுகணை சோதனையை நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தியது.

சீனாவில், சுப்பர்சொனிக் எச்டி-1 ஏவுகணை சோதனை நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடந்தது. சீனாவின் குவாங்டாங் மாகாணம் குவாங்சூவில் உள்ள ஹோங்க்டா என்ற சுரங்க நிறுவனம், இந்த சோதனையை நடத்தியது. அந்நிறுவனமே தனது சொந்த செலவில் இந்த ஏவுகணையை உருவாக்கி உள்ளது.

இது, இந்திய-ரஷ்ய கூட்டுத் தயாரிப்பில் உருவான 'பிரமோஸ்' ஏவுகணைக்கு போட்டியாக கருதப்படுகிறது. ஆனால், பிரமோஸ் ஏவுகணையை விட விலை மலிவானது என்றும், பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்த ஏவுகணை விற்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் சீனாவை சேர்ந்த இராணுவ வல்லுநர் வெய் டோங்சு தெரிவித்தார். (7)

# வதந்திகளைப் பரப்பி நாட்டின் அபிவிருத்தியை தடை செய்ய முயற்சி

## அமைச்சர் அர்ஜுன காட்டம்



(திருமலை)

திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகளை அரசாங்கம் இந்தியாவிற்கு தாரைவார்க்க சூழ்ச்சி செய்கின்றது என்று சிலர் பொய்யான வதந்திகளை பரப்பி நாட்டுக்கு கிடைக்கப் பெறவுள்ள அபிவிருத்திகளை தமது சுய தேவைகளுக்காக தடை செய்ய முயற்சிக்கின்றனர் என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய நிறுவனத்துடன் செயற்படுத்திக் கொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கனியவள கூட்டுத்தாபனத்திற்குள் ஒரு சிலர் முரண்பாடுகளை தோற்றுவித்தால் அதனை எதிர்கொள்ள தயார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை தளம்பல் ஏற்படும் பொழுது எமது நாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பானது. இதனை அரசாங்கத்தின் குறைபாடு என்று குறிப்பிட முடியாது.

ஆனால் இதனையும் எதிர்த்தரப்பினர் விட்டு வைக்கவில்லை. தற்போது ஆட்டோக்களுக்கு மாத்திரம் பயன்படுத்தக்கூடிய வகையில் மிகு குறைந்த விலையில் எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் தொடர்பில் ஆய்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இதனை அடுத்த மாதம் சந்தைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கைதான இந்தியர் 'றோ' உளவாளியே விபரங்களை வெளியிட்ட விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யும் சதித் திட்டத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இந்தியர், இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' வின் ஒரு உறுப்பினர் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,


"இது தொடர்பாக நாம் நடத்திய விசாரணைகளில், இலங்கையில் கைது செய்யப்பட்ட இந்தியரின் பெயர், ராஜேந்திர குமார் என்றும், அவர் 'றோ'வில் பணியாற்றுகிறார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த இந்தியரின் 'றோ' அடையாள அட்டை இலக்கம், RB317217/VJ ஆகும்.

அவர், 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இலங்கை வந்துள்ளார். இங்கு தொடர்ந்து தங்கியிருந்து 'றோ'வுக்காக பணியாற்றியுள்ளார்.

அவர் இரண்டு முறை என்னைச் சந்திக்க முயற்சித்துள்ளார். ஆனால் நான் அப்போது வீட்டில் இருக்காததால், என்னைச் சந்திக்க முடியவில்லை.

கைது செய்யப்பட்ட பின்னர், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று இந்தியத் தூதரகம் கூறியிருந்தது.





இதுபோன்ற சம்பவங்களைச் சமாளிக்க இது எளிதான வழியாகும்.

இப்போதும் கூட இலங்கையில் 'றோ' செயற்படுகிறது. ஆனால் ஜனாதிபதி மைத்திரி இன்னமும் மௌனமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்.

'றோ'வும், புலம்பெயர் தமிழர்களும் இலங்கையில் சில சூழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பதற்கு இது சான்றாக இருக்கிறது.

இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது" என்றும் விமல் வீரவன்ச எச்சரித்தார். (இ-7)

# நல்லாட்சி தொடர்ந்தால் மக்கள் வாழ முடியாத நிலை ஏற்படும்

## பவித்ரா எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

நாடு கடந்த தமிழ் அமைப்புகளின் தேவைக்கிணங்கவே அரசாங்கம் புதிய அரசியலமைப்பு திருத்தத்தை மேற்கொள்கின்றது. அத்துடன் அரசாங்கத்தின் இயலாமையே பொருளாதார பிரச்சினைக்கு காரணமாகும்.

அதனால் இந்த அரசாங்கம் தொர்டர்ந்து ஆட்சியில் இருந்தால் மக்கள் வாழமுடியாத நிலை ஏற்படும் என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் முக்கிய வளங்களும் வெளிநாடுகளுக்கு விற்கப்படும். அதனால் அரசாங்கத்தை வீழ்த்தியே ஆகவேண்டும். அதற்காக நாட்டை நேசிக்கும் மக்கள் எங்களுடன் கைகோர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டு எதிரணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவ்வாறு இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

---

# இன்று ஒரு தகவல்

## கருத்தூன்றிச் செயற்பட வேண்டியதன் அவசியம்

சில பேர் ஒரு செயலில் இறங்கினால் பக்கத்தில் இடி விழுந்தால் கூட என்ன, அங்கே ஏதோ புகை என்று கேட்கிற மாதிரி நடந்து கொள்கிறார்கள். விமானத்தை ஓட்டுகிறவர்களுக்கு கவனச்சிதறலே இல்லாத செயற்பாடு தேவை. மூட்டிக் கடையிலும் கண்ணாடி கடையிலும் வேலை செய்கிறவர்கள் மிகக் கவனமாகச் செயற்படுவார்கள். இவர்களுக்கு இருக்கும் எச்சரிக்கை உணர்வு மற்றவர்களுக்கு வரவேண்டும்.

படிக்கும் போது கிரிக்கெட் ஞாபகம், கிரிக்கெட் பார்க்கும் போது பரீட்சை பற்றிய பயம் என்று இருந்தால் இவற்றில் ஈடுபாடு என்பது எப்படி வரும்? நினைப்பொன்றும் செயல் வேறு மாக இருந்தால் ஓர் இடத்திலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. நேரமும் வீணாகும்.

முழுக் கவனத்துடன் ஒரு செயலை செய்யும்போது அரை மணி நேரம் மட்டும் ஆகும் என்றால் அதே செயலை கவனக்குறைவுடனோ ஈடுபாடு இன்றியோ செய்யும் போது இரட்டிப்பு நேரமோகூட ஆக வாய்ப்பிருக்கிறது.

அவசரமாகவும் பதற்றத்துடனும் ஒரு காரியத்தைக் செய்வதைவிடச் செய்யாமலே இருக்கலாம். காரணம் இதில் ஆக்க வேலையை அழிவு வேலையாக ஆக்கி விடும் வாய்ப்புத் தான் அதிகம்.

ஒரு வேலையைக் கருத்தூன்றிச் செயற்பட என்ன வழி அந்த வேலையால் கிடைக்கக்கூடிய பாராட்டை முதலில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வேலையால் கிடைக்கக் கூடிய நன்மைகளை நினைத்துப் பார்க்க வேண்டும். தவறு நேர்ந்து விட்டால் எழக்கூடிய திடல்களை அல்லது வீண் விமர்சனங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். நட்டங்களை எண்ணி பார்த்து சற்றே கலவரம் அடையவும் வேண்டும்.

கண்ணாடிப் பொருட்களை விற்ற அல்நாசர் அவற்றை காலருகே வைத்துக்கொண்டு கனவு கண்டபடி காலால் அதை எட்டி உதைத்த கதையாகி விடாமல் மீண்டும் மனம் தளராமல் உடல் சுமந்த விக்கிரமாதித்தன் போல் செயற்பட்டால் வெற்றிகள் நம் வீட்டுக் கதவைத் தட்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# சோம்பலைப் போக்கிச் செயற்பட்டால் கல்வி, செல்வம் கைவரப் பெறும்

நர+அசு+அசுரர்+சம்காரம் என்ற நான்கு சொற்கள் சேர்ந்தே நரகாசுரர் சங்காரம் என்ற சொல் உருவாகியுள்ளது. இந்து மதத்தில் மனிதர்களின் மனதிலுள்ள கெட்ட எண்ணங்களை அசுரர்களாக உருவகித்து அவற்றை அகற்றிவிட்டு வாழ வேண்டியதன் அவசியத்தை பாமர மக்களுக்கு விளக்குவது வழக்கம்.

இந்த வகையில் மக்கள் மனதில் சாதாரணமாக ஏற்படக்கூடிய பொறாமை, பிறருக்கு கேடு செய்யும் எண்ணம், தவறான காம நுகர்வு, மிகுந்த கோபம், நம்பிக்கை துரோகம், நன்றி மறத்தல் போன்ற கெட்ட எண்ணங்களைஎடுத்தியம்பி நரகாசுர சங்காரத்தை கண்ணுற்ற பொழுதிலேயே அவற்றை மனதில் இருந்து அகற்றி விட்டு வீட்டிற்குப் போக வேண்டும். அவ்வாறு செய்வதே அர்த்தமுள்ள இந்து மதத்தை கடைப் பிடிப்பவர்கள் செய்யும் அர்த்தமுள்ள நடவடிக்கையாக அமையும்.

கல்வி, செல்வம் என்பன கைவரவேண்டுமானால்சோம்பலை அகற்றிச் சுறுசுறுப்புடன் செயலாற்ற வேண்டும். இதை உணர்த்துவதற்கும் நவராத்திரி விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எருமைஓர்சோம்பல்குணமுடைய விலங்கு. அதனை வாகனமாக்கி அதில் உற்சாகமான வடிவில் துர்க்கையை அமர்த்தி சோம்பலை நசுக்கி நாங்களும் உற்சாகமாக செயற்பட்டால் கல்வி, செல்வம் என்பனகைவரப்பெறும் என்பதை முதலாவதாகவிளங்க வைக்க முதல் மூன்று நாட்களிலும் துர்க்கை வழிபாடு செய்ய வேண்டும் எனக் கூறப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து வரும் மூன்று தினங்களுக்கு லட்சுமியையும்அதனைத் தொடர்ந்து வரும் மூன்று தினங்களும் சரஸ்வதியையும் வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றின் அர்த்தத்தை உணர்ந்து நவராத்திரி வழிபாடாற்றுவோமாக.

**ச.ஆ.கோபாலமூர்த்தி**
**வண்ணார்பண்ணை**

# தவிசாளர் தன்னிச்சையான முடிவு த.தே.ம.மு.உறுப்பினர்கள் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

09.10.2018 பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள் தங்களை சந்தை மேற்தளத்தில் இருந்து கீழ் தளத்திற்கு மாற்றுமாறு கோரி பணிப்புறக்கணிப்பு ஒன்றை செய்திருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாக சபையின்விசேடகூட்டம்அதே தினம் ஏற்பாடு செய்யப்பட்டு மரக்கறி வியாபாரிகளின் பிரதிநிதிகள் சபைக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடலில் மரக்கறிச் சந்தையை கீழ்த்தளத்திற்கு மாற்றுவதென ஏகமானதாக முடிவு செய்யப்பட்டது. இத் தீர்மானத்திற்கு எதிராக தவிசாளர் செயற்படுகிறார்.

சபையில் பிரேரணை கள் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு தீர்மானங்களாக்கப்பட்ட பலவிடயங்களுக்கு எதிராக தவிசாளர் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கின்றார்.

கடந்த ஆறு மாதங்களாக சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மக்களின் நலனுக்காக பிரயோகிக்கத் தெரியாத முகாமைத்துவக் குறைபாடுள்ளதவிசாளர்சபையின் நடவடிக்கைகளுக்கு போதிய ஆதரவை அளிக்கத் தவறுகின்றார்.

பருத்தித்துறை நகர சபையை வினைத்திறனான சபையாக மாற்றுவதற்கு பதிலாக உறுப்பினர்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து செயலாளருடன் சேர்ந்து சபையை நடத்த முற்படுகின்றார்.

அலுவலர்களுக்கானஉள்ளக இடமாற்றத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வராமல் செயலாளர் நடைமுறைப்படுத்துகின்றார்.

செயற்றிட்டங்களை சபையின் அனுமதி பெறப்படாமல் தவிசாளர் தன்னிச்சையாக அனுமதிக்கின்றார்.

அலுவலக உபகரணங்கள் சேவைகள் பெறப்படாமல் தவிசாளர் தன்னிச்சையாக அனுமதிக்கின்றார்.

மேலே குறிப்பிடப்படும் காரணங்களுக்காக நேற்றைய சபை அமர்வில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய நாம் வெளிநடப்பு செய்கின்றோம்.

மேலே குறிப்பிடப்படும் காரணிகள் சீர்செய்யப்பட வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் சபையை வினைத்திறனாக மாற்றுவதற்கு அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து சபையை வழிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அவ்வாறு இல்லாவிடின் நாம் ஏனைய உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து தொடர்போராட்டங்களை முன்னெடுப்போம் என அக்கட்சி உறுப்பினர் பரமேஸ்வரன் சுரேஸ் தெரிவித்துள்ளார். (இ)



மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட நாவற்குழி முன்னூறு வீட்டுத்திட்டப் பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். சனசமூக நிலையத்தினர், வட்டார உறுப்பினர் மற்றும் பிரதேச இளைஞர்கள் என நூற்றுக்கணக்கானோர் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (படங்கள்:-சுபேசன்)

# ஆசிரிய கலாசாலையில் வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இந்து மன்றம் நடத்தும் வாணிவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக மத்திய கல்வி அமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் சைவப்புலவர் காரை கந்தையா பத்மானந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனும் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனும் கலந்துகொள்வர். கலாசாலை ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1534


### சஜீவன்




### கிருசாந்




### சிம்பு




### யுவராஜ்




### கபிசனா




### லதுமி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கழிவுகளை அகற்ற போதிய இடமில்லை

## பிரதேச சபையினர் திண்டாட்டம்

சாவகச்சேரி பிரதேச சபை யினர் இதுவரை காலமும் மலச லகூடக் கழிவுகளை உரிய முறை யில் அகற்றி வந்துள்ளனர். இருப் பினும் தற்போது வாகன வசதி, ஆளணி வசதி உள்ள போதிலும் மலக்கழி வுகளை கொட்டுவதற் கான இடப் பிரச்சினை காரண மாக மலக்கழி வுகளை அகற்று வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது. சாவ கச்சேரி பிரதேசத்தில் நிரம்பு கின்ற மலசலகூடக் கழிவுகள் இதுவரை காலமும் வரணி-குடமியன் பகுதியில் அமைந் துள்ள தனியார் ஒருவரின் சப்ரா தோட்டத்திற்கு நடுவில் பெக்கோ மூலம் கிடங்கு வெட்டி அதற்குள் கழிவு களைக் கொட்டி உடனடியாக மூடி வந்துள்ளனர். காணி உரி மையாளரின் முழு சம்மதத்துடனே இந்தச் செயற்பாடு இது வரை காலமும் இடம்பெற்று வந்துள்ளது. இந் நிலையில் குறித்த காணி உரி மையாளருடன் தனிப்பட்ட முறையில் பகையை ஏற்படுத்திக் கொண்ட அப் பிரதேச மக்கள் மலக்கழிவுகளை குறித்த இடத்தில் கொட்டுவ தால் தமக்கு பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்துள் ளனர். இதனால் மலக்கழிவுகளை அகற்றுவதில் புதிய சிக்கல் ஏற்பட்டிருப்பதாக பிரதேச சபையினர் தெரிவித் துள்ளனர். இது தொடர்பில் பிரதேச சபையினர் தெரிவிக்கையில், 125 ஏக்கர் காணியின் நடுப்ப குதியில் பெக்கோ மூலம் கிடங்கு வெட்டிக் கழிவுகளை கொட்டுவதனால் எந்தப் பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. அருகில் கிணறுகளும் இல்லை. இதனால் அண்மையில் கொடிகாமம் பொலிஸாரின் மலசலகூடக் கழிவுகளை அகற்றக் கோரியும் எம்மால் அகற்ற முடியவில்லை. இது தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளர் யாழ். மாநகரசபை முதல்வரை சந்தித்துப் பேசியுள்ளார். 4மாத காலத்திற்கு அளவுக் கட்டுப்பாட்டுடன் மலக் கழிவுகளை கொட்ட அனுமதி தந்துள்ளனர். இருப்பினும் கழிவுகளை அகற்ற பெறும் பணத் தினை விட எரிபொருள் செலவு அதிகமாக இருக்கும் என சாவகச்சேரி பிரதேச சபையினர் தெரிவித்து ள்ளனர். (இ-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 160 |
| தக்காளி | 80 | 80 | 50 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 50 |
| கோவா | 130 | 120 | 50 | 60 |
| கரட் | 160 | 180 | 130 | 200 |
| பூசணி | 40 | 50 | 40 | 80 |
| புடோல் | 150 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 280 | 240 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 160 |
| லீக்ஸ் | 90 | 120 | 60 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 50 | 80 |
| கறிமிளகாய் | 150 | 180 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 260 | 240 | 200 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | – | 80 | 100 |
| கீரை-1பிடி | 50 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 300 | 320 | 300 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 180 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 240 | 90 | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 120 | 80 |

## நயினாதீவு இறங்குதுறை புனரமைப்பு

நயினாதீவு செல்லும் பொதுமக்களின் நன்மை கருதி நயினாதீவு இறங்குதுறை புனரமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் எதிர்வ ரும் புதன்கிழமை (24.10.2018) தொடக்கம் தற்காலிக இறங்கு துறையைப் பயன்படுத்துவது தொடர்பாக தனியார் படகு சேவை உரிமையாளர் சங்கத்திற் கும் வேலணைப் பிரதேச செயலருக்கும் இடையே கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற விசேட கலந்து ரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே திருத்த வேலைகள் முடிவடையும் வரை தற்காலிக இறங்குதுறையே பாவனையில் இருக்கும். குறித்த புனரமைப்புச் செற்பாட்டிற்கு அனைத்துப் பயணிகளும் ஒத்துழைப்பு வழங்கு மாறு வேலணை பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

## முதியோர் தின விழாவும் ஊர்வலமும்






யாழ்ப்பாணமாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் மாவட்ட முதியோர் சங்க ங்க ளும் இணைந்து நடத்திய யாழ்ப்பாண மாவட்ட முதி யோர் தின விழா உரும்பி ராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் வட மாகாண சமூக சேவைகள் திணை க்களப் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம் தலை மையில் அண்மையில் நடை பெற்றது.

இவ் விழாவில் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப் பாய் பிரதேச செய லாளர் திருமதி. சுபாசினி மதிய ழகன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தி யட்சகர் த. கிருபாகரன், யாழ் மாவட்ட சமூக சேவை உத்தி யோகத்தர் வ. செல்வம் ஆகி யோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

சமூக சேவையில் ஈடு பட்ட முதியோர்கள் கௌரவிக் கப்பட்டனர். முதியோருக் கான பல விதமான போட்டி களில் வெற்றி பெற்றவர்க ளுக்கும் பரிசில்களும் வழ ங்கப்பட்டன.

அத்துடன் விழிப்புண ர்வு ஊர்வலம் ஒன்று யாழ்ப் பாண மாவட்ட மூத்த பிரஜை பேரவையின் தலை வர் சு. பரம்சோதி தலைமை யில் இடம்பெற்றது. (இ

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 8 (சனி)

## (நீதிமான்)

பணம் சேர்ப்பதே இவர்கள் குறிக்கோளாக இருக்கும். பணம் தவறான வழியில் சேர்க்கப் பெரும் திட்டங் கள் இருக்கும். சுதந்திரமா கச் செயற்படவே விரும்பு வார்கள். எப்போதும் பலருக்கு மத்தியில் வாழ் வார்கள். குடும்பத்தில் தனக்குக் கட்டுப்பட்ட மனைவியையே விரும்பு வார்கள். பலவிதமான சோதனைகளை சாதனை யாக மாற்ற முயற்சி செய் வார்கள். பிடிவாதம், வைரா க்கியம், தனிப்பட்ட கொள் கைகள் இருக்கும். மனம் உல்லா சத்தையே விரும் பும். வசந்தம் இவர்களின் வழிகாட்டியாகும். உடல் உறுதியிருக்கும் மறைந்தும் வாழ்க்கை நடத்துவார்கள். நாடோடி போல ஊர்சுற்றித் திரிவார்கள். போலியான திடீர் பரிகார பூஜைகளை யும் தவறான ஜோதிட ஆலோ சனைகளையும் நம்பி ஏமா றுவார்கள். பிறரையும் அதேவழியில் ஏமாற்ற முற் படு வார்கள். சிலர் சமூகத் தில் நல்ல பெயரும் புக ழும் பொதுவாழ்வில் சிறப் பும் அடைவார்கள். உழை ப்பே உயர்வுக்கு வழிவகுக் கும். மங்காத புகழுடன் வாழ்வார்கள்.

26 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

முன்னேற்றத்தில் அதிக ஆர்வமுடையவர்கள். வாழ் க்கையில் பெரிய இலட்சி யத்துடன் வாழ்வார்கள். தொழிலில் அரும் பாடுபட்டு முன்னேறுவார் கள். எந்தத் துறையில் ஈடு பட்டாலும் இவர்களுக்கு மறைமுக எதிரிகள் இருப் பார்கள். வீண் எதிரிகளை உருவாக்கிக் கொண்டேயி ருப்பார்கள். அறிவாற்ற லும் நிரம்பியவர்கள். நெஞ் சம் எப்போதும் கலக்கம், ஏக் கத்துடன் இருக்கும். சிறு வயதிலேயே பெற்றோரை இழப்பதும், குடும்பப் பாரங் களைச் சுமப்பதும் இவர் களுக்கு சோதனையாக இருக்கும். பிடிவாதத்தால் வீண்பழிக்கு ஆளாகின் றனர். பல விரோ திகளை உருவாக்குகின்றனர். கற் பனை சக்தி, கூர்மையான அறிவு போன்றவற்றால் வெற்றி பெறுவார்கள். நகைச்சுவை உணர்வு காணப்படும். தாரா ளமாகச் செலவு செய்வார் கள்.

இளமையில் மிகுந்த போராட்டத்தைச் சந்திக்கக் கூடிய நபர்கள். கதை, பாடல், கட்டுரை, நாடகம், காவியம், கவிதை என்று சகல துறை களிலும் முத்திரை பதிக்கப் பிறந்தவர்கள். மேதாவித் தனமிருக்கும். மேன்மையான தொழில் செய்து பணம் ஈட்டு வார்கள். இவர்களுக்குக் காப்பாளர்களின் ஆதரவு சிறப்பாக இருக்காது. தனிப் பட்ட வழியில் செல்வதாகக் கூறுவார்கள். இவர்களின் முயற்சிக்குப் பெரும் சோத




னைகள் வந்து கொண்டே யிருக்கும். அனைத்தையும் சகித்துக்கொண்டு முன் னே றுவார்கள். உணவு, உறக்க மின்றி உழைக்கக் கூடிய நபர்கள். வாகனப் பிரியர் கள். எதிர்ப்பைச் சமாளிக் கும் சக்தியுண்டாகும். விஞ் ஞான ஆராய்ச்சியில் மனம் ஈடுபடும். கொள்கையில் பிடிவாதமுடையவர்கள். ஆனால் கொள்கை எதுவும் நிலையாக இருக்காது. இவர் களைப் பின்பற்றுபவர்கள் விரைவில் குழம்பிப் போவா ர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. நகைச்சுவை கலந்த விகடவான்.

செல்வச் சீமான்கள். இன்ப துன்பங்களை ஒரே போல எண்ணுவார்கள். இலக்கிய அறிவு நிரம் பியவர்கள். நினைப்பு நிறைவேறும். இளமை யில் கஷ்டப்பட்ட இவர்கள் பருவ வயதிற்குப் பின்னர் செல்வ பாக்கியத்தோடு வாழ்வார்கள்.

பொன், பொருள், பூமி இலாபம் கிடைக்கும். தெய்வ வழிபாட்டில் ஆர் வமிருக்கும். எதையும் தொடர்ந்து கடைப்பிடிக்க மாட்டார்கள். தானும் குழ ம்பி தன்னைச் சார்ந்த வரையும் குழப்பு வார்கள். மேன்மையான தொழிலால் மோதாவிப் பட்டம் எடுப் பார்கள். போலி கௌர வமிருக்கும். தன் செயல் விளைவுகளால் பாதிக்கப் பட்டு விட்டு விதியைக் காரணம் காட்டுவார்கள்.

உறவு, நட்பில். விரிசல் உண்டாக்கிக் கெட்ட பெய ரெடுப்பார்கள். தன்னைப் பற்றி புகழ்பவருக்கு வேண் டிய அனைத்து உதவிகளை யும் செய்து கொடுப்பார்கள்.

குடும்ப வாழ்க்கை மிக வும் போராட்டமாகவே இருக்கும். இவ்வெண் காரர்கள் விதியால் பெரி தும் பாதிக்கப்படுவார்கள். அனைத்துக் கஷ்டங்களை யும் சகித்துத் தலைமை பதவி பெற்று சிறந்த நிர் வாகி என்ற பட்டம் பெறு வார்கள். பலரை நிர்வகி க்கும் ஆற்றலிருக்கும்.

(தொடரும்....)

# "மரபுரிமை மையம்" நல்லூரில் நேற்றுத் திறப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழரின் பாரம்பரிய வாழ்வியலை பாதுகாத்து வெளிப்படுத்தும் நோக்கில் 'மரபுரிமை மையம்' வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள். அமைச்சின் கீழ் உள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள். அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தில், மூதாதையர் பயன்படுத்திய பண்டையகால உபகரணங்கள் பல காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை பற்றிய அறிவு அவர்களின் பாவனைப் பொருட்கள் பற்றிய அறிவு ஆகியன இன்று அருகிபோனநிலையில் அவற்றை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் மீள அடையாளப்படுத் துவதும், அவற்றின் பயன்பாடுபற்றி தெரியப்படுத்துவதும், இருப்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதும், அவற்றைக் காட்சிப்படுத்தும் நோக்கில் இந்த மரபுரிமை மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## எல்லாளனுக்கு அஞ்சலி



அநுராதபுரம் தேவநம்பியதீசபுரம் முத்துமாரி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் தலைமையில் அநுராதபுரத்துக்கு சென்ற குழுவினர்.இலங்கை இந்து மகா சபாவின் தலைவரும் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய செயலாளருமாகிய வேலு சுரேஸ் குருக்களை சந்தித்து ஆலய கட்டுமானப்பணிகள் மற்றும் வேலைகள் தொடர்பாக கலந்துரையாடியதுடன், அநுராதபுரத்தை அரசாண்ட வீரத்தமிழன் எல்லாள மன்னனின்சமாதிக்கு சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர். (இ-9)



இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையில் இலங்கை வங்கியின் முன்னோடிகள் தினம் அண்மையில் கிளை முகாமையாளர் எஸ்.பரதன் தலைமையில் இடம்பெற்றது.



யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஜே/230 மூத்த பிரஜைகள் சங்கமும் கலைவாணி சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய மூத்த பிரஜைகள் சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



யாழ்.நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் கண்காட்சியும் ஆசிரியர் தின விழாவும் அதிபர் தி.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

73

தற்பொழுது மன்னார் உள்ளிட்ட யாழ்ப்பாணப் பிரதேசமும் போர்த்துக்கீசர் வசமாகிவிட்டது. இந்நிலையில் 1621களில் இருந்து 1630கள் வரை போர்த்துக்கீசரின் கீழ் இருந்த பிரதேசங்களை த ச நொறன்காவே ஆட்சிசெய்தான்.

ஒரு புறத்தில் இலங்கை நிலைமை போர்த்துக்கீசருக்கு ஒரு தற்காலிக அமைதியை ஏற்படுத்திய போதிலும், மறுபுறத்தில் ஒரு பேரிடி காத்திருந்தது. ஆனி 1619 இல் ஆங்கிலேய-டச்சு (The Anglo-Dutch) உடன்படிக்கை ஐரோப்பாவில் கைச்சாத்திடப்பட்டது. அரசியல், வர்த்தகக் கூட்டு நடவடிக்கை சம்பந்தமாக இவ் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது.

இந் நிகழ்வு டச்சுக்காரரின் நடவடிக்கை ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இடம்பெறப்போகிறது என்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. 1620 இல் டச்சுக்காரர் போர்த்துக்கீசரின் காலனித்துவ நாடுகளான பாகியா, அங்கோலா ஆகிய நாடுகளைத் தாக்கினர்.

இந்நிகழ்வு, போர்த்துக்கீசருக்கு அதிக செலவினங்களையும், பெரும் படை நகர்வுகளையும் ஏற்படுத்தின. தொடர்ந்து 1622 இல் ஆங்கிலேய - டச்சுப் படையினர் மேலும் ஒரு போர்த்துக்கீசக் காலனியான மொசாம்பிக்கைத் தாக்கிப் போர்த்துக்கீசப் படைகளுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தினர்.


மேலும் மேற்படி கூட்டுப்படையினர் கோவாவிலிருந்து வருடம் ஒருமுறை லிஸ்பனுக்குப் போகும் போர்த்துக்கீசரின் சரக்குக் கப்பல்களை 1622-1623 களில் தொடர்ச்சியாக நான்கு மாதங்களுக்குச் செல்ல விடாது தடைபோட்டனர்.

இதேவேளை பாரசீகப் படையினருக்கு ஆங்கிலப் படையினர் 1622களில் ஒமுஸ்ஸை (Ormuz) கைப்பற்ற உதவியிருந்தனர். பாரசீகக் குடாவில் போர்த்துக்கீசருக்கு ஆதிக்கம் பறிக்கப்பட்ட நிகழ்வு, அவர்களுக்கு மிகப்பாரிய உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தக் காரணமாயிற்று.

அடுத்து வருகின்ற வருடங்களில் பாரசீகக் குடாவைத் திரும்பப் பெற்றுத் தமது மேலாண்மையை அங்கு பாதுகாப்பது என்பது போர்த்துக்கீசருக்கு பெரும் சவாலாக அமையப் போகின்றது என்ற உளவியல் தாக்கமாகவே அது காணப்பட்டது.

மேலும், இம் முயற்சியில் அதிகளவு போர்வீரர்களையும், படைபலத்தையும், பணத்தையும் செலவிட வேண்டியிருப்பதால் இலங்கையின் பாதுகாப்பு நிலை பாதிக்கப்பட்டு இலங்கையை டச்சுக்காரரிடம் இழக்கவேண்டி நேரிடலாம் என்ற அச்சமும் போர்த்துக்கீசரிடம் காணப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில், கோவாவிலுள்ள போர்த்துக்கீச வைஸ்ரோய் எழுதிய கடிதம் 1622 இல் போர்த்துக்கீச மன்னனைச் சென்றடைந்தது. அதாவது, கண்டி மன்னனுக்கு உதவ போர்த்துக்கீசரை இலங்கை யிலிருந்து விரட்டும் பொருட்டு டச்சுக்காரரின் கப்பல்களில் ஒன்று 1620 இல் இலங்கைக்கு ஏற்கனவே வந்து நிலை கொண்டு விட்டதாக அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.



மன்னார் கோட்டை

> “யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்களக் கூலிப் படையையும் சேர்த்துக்கொண்டு திருகோணமலையை ஆடி, 1623 இல் சென்றடைந்தான். படையைக் கொண்டும், பீரங்கிகளைக் கொண்டும் கோணேஸ்வரர் கோவில் நொறன்காவினால் முற்றாக அழிக்கப்பட்டு, அங்கிருந்த கருங் கற்கள் போர்த்துக்கீசரின் கோட்டையைக் கட்டப் பயன்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து சுண்ணாம்புக் கற்களும், சுண்ணாம்பும் ஒலிவேறாவினால் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன”

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

இந்நிலையில் போர்த்துக்கீச மன்னன் உடனடியாக, இலங்கைக் கரையோரங்களைச் சுற்றியுள்ள துறைமுகப் பிரதேசங்களில், பாதுகாப்புக் கருதிக் கோட்டைகளைக் கட்டும்படி கோவாவிலுள்ள வைஸ்ரோயுக்குக் கட்டளை அனுப்பினான். திருகோணமலை, மட்டக்களப்பு, வெலிகம, காலி, களுத்துறை, நீர்கொழும்பு, ஊர்காவற்றுறை ஆகிய துறைமுகப் பகுதிகளில் கோட்டை கட்டுவதற்குக் கட்டளையிடப்பட்டது.

ஏற்கனவே கொழும்பிலும் மன்னாரிலும் போர்த்துக்கீசர் கோட்டைகளைக் கட்டியிருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. முதலில் திருகோணமலையில் கோட்டையைக் கட்டும்படி வைஸ்ரோயால் நொறன்காவுக்கு அறிவிக்கப்பட்டது.

சித்திரை 1623 இல் நொறன்கா படைபலத்துடனும் ஆறு பீரங்கிகளுடனும் திருகோணமலையை நோக்கிப் புறப்பட்டான். மன்னார் வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்த நொறன்கா ஓரிரு வாரம் அங்கு தங்கியிருந்து, படைகளை ஒழுங்குபடுத்திக்கொண்டு, யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்களக் கூலிப் படையையும் சேர்த்துக்கொண்டு திருகோணமலையை ஆடி, 1623 இல் சென்றடைந்தான்.

படையைக் கொண்டும், பீரங்கிகளைக் கொண்டும் கோணேஸ்வரர் கோவில் நொறன்காவினால் முற்றாக அழிக்கப்பட்டு, அங்கிருந்த கருங் கற்கள் போர்த்துக்கீசரின் கோட்டையைக் கட்டப் பயன்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து சுண்ணாம்புக் கற்களும், சுண்ணாம்பும் ஒலிவேறா வினால் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் உணவுப் பண்டங்களும், வெடி மருந்துகளும், யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களப் படைகளும் ஒலிவேறாவினால் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. நான்கு மாதங்களில் திருகோணமலையில் கோட்டை கட்டும் வேலை பூர்த்தியாக்கப்பட்டு, பிரான்சிஸ்கோ பின்ரோ பிமென்ரோ (Franscisco Pinto Pimento) தலைமையில் கோட்டையைக் கையளித்துவிட்டு, சிங்களக் கூலிப்படைகளையும் பாதுகாப்பின் நிமித்தம் இருத்திவிட்டு நொறன்கா கொழும்புக்குத் திரும்பினான்.

மேலும், ஏற்கனவே போர்த்துக்கீச அரசினால் நொறன்கா விற்கு கட்டளையிட்டபடி, 1625 இல் கோட்டையை அண்மித்துள்ள கரையோரப் பகுதிகளாகிய நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, காலி ஆகிய துறைமுகங்களில் கோட்டைகள் கட்டி முடிக்கப்பட்டு, கோட்டையின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பில் துறைமுகம் இல்லாத காரணத்தினாலும், ஏற்கனவே திருகோணமலையில் கோட்டை கட்டப்பட்டதன் விளைவாகவும், மட்டக்களப்பில் கோட்டை கட்டுவதில் கருத்து முரண் பாடுகள் காணப்பட்டன.

இருந்தும் வைஸ்ரோய் கொண்டி த விடுகுவே றா (Conde de Vidiguetrra) வின் தட்டளைப்படி, நொறன்கா, 2 ஆடி 1628 இல், 100 போர்த்துக்கீசப் படைகளுடனும் 2000 சிங்களக் கூலிப் படைகளுடனும் மட்டக்கள ப்பு ஏரியைச் சென்றடைந்து, அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் ஊர்ப் பக்கமாக புளியநதீவில் கோட்டையைக் கட்டி முடித்தான்.

யாழ்ப்பாண இராச்சியத்தினது மறைவுடன், மட்டக்களப்பில் கண்டி மன்னர்கள் மேலாண்மை செலுத்தி வந்தனர் என அறிய முடிகிறது. ஆனால் 1617இல், போர்த்துக்கீசருக்கும் கண்டி மன்னன் செனரத்துக்கும் இடையில் இடம்பெற்ற சமாதான உடன்படிக்கையின் பின், போர்த்துக்கீசர் மட்டக்களப்புப் பிரதேசத்தையும் தமது ஆணைக்குள் கொண்டு வந்தனர்.

மேலும் 1628களில் செனரத் போர்த்துக்கீசருடன் முரண்பட ஆரம்பித்ததன் விளைவாகவும், கரையோரங்கள் எங்கும் தமது பாதுகாப்பு அரண்கள் இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலும் போர்த்துக்கீசர் மட்டக்களப்பில் கோட்டையைக் கட்டினர்.

போர்த்துக்கீச யாழ்ப்பாணத் தளபதி ஒலிவேறா 1627 இல் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றான். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்த நூற்றுக்கணக்கான சைவக் கோவில்களை இடித்து, அங்குள்ள விலைமதிப்பற்ற செல்வங்கள் யாவற்றையும் சூறையாடிய இத் தளபதியின் மரணம் நிச்சயம் அப் பிரதேச மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்க வேண்டும். ஒலிவேறாவின் மரணத்தின் போது, யாழ்ப்பாணத்தில் நூற்றுக் கணக்கான போர்த்துக்கீசப் போர் வீரர்களும், 5000க்கும் அதிகமான சிங்களக் கூலிப்படைகளும் இருந்திருக்கின்றார்கள்.

(தொடரும்)




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# மதங்களும் நாங்களும்



எங்கள் பிள்ளைகளுக்குள் மத வேறுபாடுகளைக் களைந்து சமத்துவத்துடன் வாழக்கற்றுக் கொடுப்போம். உலகில் எத்தனையோ மதங்கள் இருந்தாலும் அவை போதிப்பது எல்லாமே அன்பையும் சமத்துவத்தையும் தான் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குப் புரியும் படியாக நடந்து கொள்ளுங்கள். ஒருவன் தான் விரும்பிய எந்த மதத்தைப் பின்பற்றுவதற்கும் அவனுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. ஆனால் அது திணிப்பாக இருக்கக் கூடாது. பிற மதத்தவர்களின் நடைமுறைகளைக் கேலிசெய்வது, சரியான மதம், பிழையான மதம் என விவாதிப்பது எம் வாழ்வைப் பாழாக்கிவிடும். நாம் பின்பற்றும் மதத்தின் ஒழுக்க விழுமியங்களைச் சரிவரக் கடைப்பிடித்து வாழ்ந்தால் அது எம்மை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும். அதை விடுத்து பிற மதத்தவரைக் கிண்டலடிப்பதும் அம் மத நடைமுறைகளைப் பிழை என்று விவாதிப்பதும் உகந்த செயற்பாடுகளல்ல. மதங்களின் பெயரால் முரண்பட்டுக்கொள்வது நாம் பின்பற்றும் மத நடைமுறைகளை நாம் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளாமையின் வெளிப்பாடாகும்.

ஒழுக்க விழுமியங்களில் முதன்மையானது அன்பு. ஒருவர் மற்றவரில் சரியான விதத்தில் அன்பு செலுத்தப் பழகிவிட்டால் இரக்கம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மன்னிக்கும் இயல்பு ஆகிவற்றின் இருப்பிடமாக மாறிவிடுவர்.

இவற்றைத் தான் மதங்கள் மேம்படுத்த வேண்டும். எது பெரிது? யார் பெரியவர்? எது மேன்மையானது? என்ற வாதப் பிரதிவாதங்களால் ஆகப்போவது எதுவுமில்லை. மாறாக ஆக்ரோசமான சிந்தனைக்களும் குரோத எண்ணங்களுமே வளர்த்தெடுக்கப்படும். விமர்சிப்பதிலும் முரண்பாடுகளைத் தூண்டி விடுவதிலும் இன்பம் காண்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடத்தில் மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். இப்படியான பேர்வழிகளுடன் நாம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு எமது பொன்னான நேரங்களை வீணாக்கி விடுவது மட்டுமல்லாது வீண் வம்பிலும் மாட்டிவிடக்கூடாது. அவதானம்!

இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் தத்தம் மதங்களின் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி அதன் வழி ஒழுகி வாழ்வைச் சீர்படுத்திக் கொள்வது முக்கியமானது. தற்காலத்தில் பண்பாட்டு விழுமியங்கள் சிதைந்து அவரவர் தனித்துவ அடையாளங்கள் அற்றவர்களாக வாழும் நிலை வேதனைக்குரியது. இவற்றில் பெற்றோருக்கு உரிய பங்கு உண்டு.

இன்றைய இளம் சமுதாயம் சீரழிந்து செல்கிறது என்று எல்லோரும் கூறிக் கொள்கிறோம். அதற்கான காரணங்களையும் அடுக்கிக் கொண்டே செல்கிறோம்.

இதிலிருந்து அவர்களை மீட்பதற்கு அல்லது எம்மைச் சார்ந்தவர்கள் அவ்வாறான நிலைக்குச் சென்றுவிடாது தடுப்பதற்கு அல்ல, நல்ல வழியில் திசைதிருப்புவதற்கு நாம் என்ன செய்கின்றோம்? சிந்தித்துச் செயற்பட வேண்டியது மிகமுக்கிய தேவையாகவுள்ளது.

இதேவேளை எமது நாடு பல மதங்களைப் பின்பற்றும் பல இன மக்களைக் கொண்ட நாடாகவுள்ளதால் ஒரு மதத்தினர் மற்ற மதத்தவரைப் புண்படுத்தாதபடி வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஒரு பாடசாலையிலேயே பல மதங்களைப் பின்பற்றும் மாணவர்கள் படிக்கும் நிலை உள்ளது.

பொது நிகழ்வுகளில் பல மதங்களையும் பின்பற்றும் மக்கள் கலந்து கொள்ளும் நிலை உள்ளது.

மத அனுட்டானங்கள் எனப்படும் போது அது எந்த மதமாக இருந்தாலும் பொதுவாக இடம்பெறும் சந்தர்ப்பங்களில் நாம் அவற்றில் வேறுபாடு காட்டாது பழகிக் கொள்ள வேண்டும். ஈடுபாடு காட்டாது இருக்கலாம். ஆனால் வேற்றுமை காட்டி நடத்தல் கூடாது. அவ்வேளை அமைதி பேணலும் எழுந்து நின்று மதிப்புக் கொடுத்தலும் மிக முக்கியமானது. இது அவர் களின் வணக்க வேளை. நாம் ஏன் எழுந்து நிற்க வேண்டும் என்று வேற்றுமை காட்டுதல் சரியான விளக்கத்தை நாம் பெறாதவர்களாக உள்ளோம் என்ற உண்மையைத் தான் புலப்படுத்தும்.

நாம் மற்றவரிடம் எதிர்பார்க்கும் அனைத்தையும் மற்றவரும் என்னிடமிருந்து எதிர்பார்ப்பர் என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும். எனக்கு நல்ல நண்பனாக யாரும் இல்லையே என்று கவலைப்படுகிறோமே தவிர யாருக்கும் நார்ன் நல்ல நண்பனாக இருக்கிறேனா? சிந்திப்பதில்லை. மதத்தைத் தோற்றுவித்தவர்கள் தந்த செய்திகளும் தத்துவங்களும் போற்றுதற்குரியவை. அவர்களின் வாழ்க்கை நெறி புனிதமானது. தம்மை அர்ப்பணித்து இவ்வுலகு வாழ வழி காட்டினார்கள்.

ஆனால் அந்த மதத்தைப் போதிப்பவர்கள் சிலர் தம் நலனுக்காகவோ அன்றி வேறு காரணங்களுக்காகவோ பிழையான எண்ணங்களைத் தூவி விடுகிறார்கள். நாமும் நீர் கலந்த பாலில் பாலை மட்டும் பிரித்தெடுக்கும் அன்னத்தைப் போல இல்லாமல் அரிதட்டுகள் போன்று தேவையற்ற தவறான சிந்தனைகளை மட்டும் வடிகட்டி வாழும் மனிதர்களாக வாழ்வது சரியா? மதங்களின் அடிப்படைத் தத்துவங்களைச் சரிவரப் புரிந்துகொண்டு எம் வாழ்வைச் செழுமைப்படுத்துவோம்.

### தானியங்களை அதிகளவு உற்பத்தி செய்யும் நாடுகள்

- அரிசி–சீனா, இந்தியா
- கோதுமை–ஐக்கிய அமெரிக்கா, ஆர்ஜென்டீனா
- பார்லி –ரஷ்யக் குடியரசு,சீனா
- சோளம்–ஐக்கிய அமெரிக்கா, சீனா
- தினை வகை –சீனா, இந்தியா
- கோப்பி–பிரேசில், கொலம்பியா
- பருத்தி –ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா
- சணல்–இந்தியா, சீனா
- சீனி–ரஷ்யா, கியூபா
- தேயிலை–இந்தியா, இலங்கை
- பேரீச்சம்பழம்–ஈராக், சவுதிஅரேபியா

சி.நர்த்தவி,
சிறுவர் வாசிப்பு வட்டம், கொக்குவில் பொது நூலகம்

# ஓநாயும் நீலத் தீந்தையும்



ஒரு நாள் ஓநாய் ஒன்று நீல நிற தீந்தை தொட்டி ஒன்றினுள் விழுந்து விட்டது. தனது உடல் நீல நிறமானது கூட ஒரு நன்மைக்குத் தான் என எண்ணியது. ஏனைய பிராணிகள் காட்டில் முன் ஒரு போதும் காணாத ஒரு விநோத உருவத்துடன் அந்த ஓநாய் இருந்தது. விநோதமான விதத்தில் காட்டில் உள்ள மிருகங்களுக்கு ஆலோசனையும் கூறி பெரிய விடயங்களைப் பற்றியும் அது பேசியது. ஆகவே ஏனைய மிருகங்கள் அந்த ஓநாயை தங்களுடைய எஜமான் என எண்ணியது. ஒரு நாள் வேறு ஓநாய் கூட்டமொன்று அந்த காட்டில் உரத்த சத்தமாக ஊளையிட்டது.

இதைக்கேட்ட நீல நிறம் கொண்ட ஓநாயும் அதனுடன் சேர்ந்து ஊளையிட்டது. உடனே அது ஓநாய் தான் என அடையாளம் கண்டு கொண்ட ஏனைய மிருகங்கள் அதைக் காட்டில் இருந்து துரத்தி விட்டன.

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்



கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் வாணி விழா நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வா மண்டபத்தில் இடம்பெற்றது. கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் இ.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் வங்கி அதிகாரிகளின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் வங்கி அதிகாரிகள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)



யாழ்.சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினம் அண்மையில் இடம்பெற்றது. அதிபர் க.கார்த்திகேயன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலிகாமம் வலய முறைசாராக்கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.



சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்தின விழா கடந்த 16 ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்க தலைவி யோ.கேமநளினி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.




உனக்கும் பே பே உன் அப்பனுக்கும் பே பே.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல் கைதிகளை விடுவிப்பது போன்ற பாசாங்கு எதற்கு?

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தரும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

எனினும் இப்பேச்சுவார்த்தை உறுதியான நம்பிக்கை எதனையும் தரவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரையும் ஒரே மேசையில் வைத்து இதுபற்றிக் கதைப்பதான முடிவோடு ஜனாதிபதியின் சந்திப்பு நிறைவுற்றதாகவும் அடுத்த சந்திப்பு ஒரு வாரத்துக்குள் நடக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் ஜனாதிபதி நினைத்தால் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழுங்கலாம் என்ற நிலைப்பாடு இருந்தது.

ஆனால் இப்போது பிரதமரிடம் கேட்க வேண்டும், சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற வேண்டும் என்பதாக நிலைமை மாறிவிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து ஆட்சி நடத்தினால், அஃது நல்லாட்சி என்றும் அவ்வாறான ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் இப்போது அந்த நிலைமை மாறி நல்லாட்சியில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். இந்த ஏமாற்று நாடகத்தைக் கனகச்சிதமாக நிறைவேற்ற ஜனாதிபதி பிரதமரையும் பிரதமர் ஜனாதிபதியையும் சாட்டுதல் செய்கின்ற நாடகம் நடக்கின்றது.

இந்த நாடகம்தான் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையிலும் மிக நுட்பமாகப் பிரயோகிக்கப்படுவதைக் காணமுடியும்.

என்ன செய்வது, நல்லாட்சியில் ஜனாதிபதி மைத்திரியை ஆதரித்து தமிழ் மக்கள் வாக்களித்தனர்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு கூட்டமைப்பினர் பக்கபலமாக இருக்கின்றனர். இதற்காக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழுங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியில் இரா.சம்பந்தர் இருப்பதால் அது தமிழர்களுக்குப் பாதகம் என்பதாக நிலைமை முடிந்து விட்டது.

ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி சாதாரணமானதல்ல. பொதுவில் உலக நாடுகள் முழுவதிலும் ஆளும் தரப்பின் அச்சம் எதிர்க்கட்சி குறித்துத்தான்.

அதனால் நாட்டின் முக்கியமான கொள்கை வகுப்பில் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்து என்னவாக இருக்கும் என்ற ஏக்கம் ஆளுந் தரப்புக்கு இருக்கவே செய்யும்.

ஆனால் இலங்கையில் மட்டும் எதற்கும் எதிர்க்கட்சித் தலைவரின் ஆதரவுப் புள்ளடி அரசுக்கு உண்டென்பதால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி இப்போது பெறுமதியற்றதாகிப் போயிற்று.

இதன்காரணமாக அவரால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கூடச் செய்விக்க முடியவில்லை.

எதுவாயினும் வரவு செலவு திட்டத்தில் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களிப்பதற்காக இருதரப்பும் நடத்துகின்ற நாடகத்தைத் தவிர, தமிழ் அரசியல் கைதிகள் எவருக்கும் விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மை.

## ரூ.13 மில்லியன் பெறுமதியான ஹெரோயினுடன் பாதாள உலகின் முக்கிய நபர் 'ஹைபிரிட் சுத்தா' கைது

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த "ஹைபிரிட் சுத்தா" என்றழைக்கப்படும் சமீர ரசங்க என்பவர், 13 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான ஹெரோயினுடன் பாதுக்க பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரிடமிருந்து 1.1 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் கைப்பற்றப்பட் டுள்ளது.

மேலும், சந்தேகநபரிடமிருந்து 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் 2 கார்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர. தெரிவித்துள்ளார்.

அங்கொட ஹிம்புடான பகுதியைச் சேர்ந்த 37 வயதான சந்தேகநபர், நெட்டி ஒலுவ பகுதியில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று அங்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த பொதுத் தேர்தலின்போது கொழும்பு தொடர்மாடிக் கட்டடத்திற்கு அருகில் ஹைபிரிட் காரில் சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது, குறித்த காரை செலுத்திய நபர்இவர்என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள தெமட்டகொட சமிந்தவின் உதவியாளர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்தவிடம் குட்டு வாங்கினாலும் எனது கருத்து மாறாது – வெல்கம உறுதி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அரசியல் பயணத்தில் குட்டுக்கள் வாங்குவதில் சிக்கல் இல்லையெனவும், அவர் குட்டுவதற்கு தகுதியானவர் எனவும் கூட்டு எதிரணியிலுள்ள சிரேஷ்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட கூட்டத்தில், குமார வெல்கமவுக்கு பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் சிலரால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமை குறித்து வினவியபோதே குமார வெல்கம எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

என்னுடைய கருத்தை நான் கூறிக்கொண்டேதான் இருப்பேன். எனது தலைவர் குட்டினால் அதனைத் தடவிக் கொள்வேன். அதற்காக கருத்தை மாற்றிக் கொள்ள மாட்டேன். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவைத் தவிர கூட்டு எதிரணியில் வேறு தலைவர் ஒருவர் இல்லையென்பதே என்னுடைய கருத்தாகும்.

எனக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு மகிந்தராஜபக்ஷபோன்று பிரபலம் கிடையாது. அவ்வாறு நான் பிரபலம் அடையும் போது எனது வயது அதற்கு இடம்கொடுக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியாக வருபவருக்கு சிறுபான்மை சமூகத்தின் ஆதரவு இருப்பது கட்டாயமானது. அது மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே இருக்கின்றது எனவும் குமார வெல்கம தனியார் வானொலியில் நேரடி கேள்வி பதில் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார். (இ-7)

## ஐ.தே.கவில் புதிய பதவி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினால் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்கு ஷாமல் செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் வட மத்திய மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த ஷாமல் செனரத் நேற்றுக் காலை குறித்த பதவிக்கான தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

கட்சியின் நடவடிக்கைகள் மற்றும் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின நடவடிக்கைகளை கண்டறிவது இந்த பதவியின் பொறுப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சூழல் அரசியலும் நில அபகரிப்பும் யுத்தத்தின் பச்சை முகம்; உரையரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் சூழல் அரசியலும் நில அபகரிப்பும்யுத்தத்தின் பச்சை முகம் என்ற கருப்பொருளில் உரையரங்கு இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம் தலைமையில்நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பார். (இ

## நவராத்திரி பாமாலை

### இன்று விஜயதசமி



### முத்தேவிகளே

நவராத்திரி நாயகியே முத்தேவிகளே
நலமோடு எம்மை வாழவைக்கும் நவசக்திகளே
மூன்று தேவிக்கும் ஒன்பது விழா நவராத்திரி விழா
மூவுலகையே அதிரவைத்த பேரின்பவிழா
தீய எண்ணங்களை போக்குபவளே
தீச்சுடர் ஏந்தியவளே
செல்வத்தில் குடி கொள்பவளே
செல்வத்தை அள்ளித் தருபவளே
ஏட்டுடன் இருப்பவளே
ஏழைமுதல் பெரியோர் வரை கல்வி உரைப்பவளே
முத்தேவிகளுக்கும் இது முதல் விழா
முடிவுறும் ஆயுதபூஜையுடன் இந்தவிழா

லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்
யா/ டிறிபேர்க் கல்லூரி

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் லக்சபான வீதி, தோணிக்கல், அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் புதுகாமம், அடம்பன், பெரியநீலச்சேனை, இத் திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன் நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களி லும் மின் தடைப்படும். (இ-9)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

நம்முடைய காரியங்கள் நிறைவேறிய பிறகு நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துதல் இன்றியமையாதது. அதைக் கடவுள் ஏற்றுக்கொள்கின்றாரா என்பது சிந்தனைக்குரியதன்று. நாம் எமது நன்றியுணர்வை அவ்வாறு காட்டுகின்றோம்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்

**"வேண்டுதல் வேண்டாமை யிலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை யில"**

என்பது பொய்யாமொழி

புண்ணியங்கள் அனைத்துக்கும் தலையாயது நன்றி பாராட்டுவது. பாவங்கள் அனைத்துக்கும் தலையாயது நன்றி மறப்பது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டில் செல்வம் பெருக எந்த இராசிக்காரர்கள் எந்தக் கடவுளை வணங்க வேண்டும்?

இஒருவர் தனது இராசிக்கு ஏற்ற கடவுள்களை வணங்கி வந்தால் நினைக்கும் காரியம் வெற்றி பெறும்.

எனவே எந்த இராசிக்காரர் எந்த கடவுள்களை வணஙக வேணடும எனபதை படிதது தெரிநது கொளளுஙகள.

**மேஷம்**

மேஷ ராசியை ஆளும் கிரகம் செவ்வாய். இந்த ராசிககாரரகள தனது பலததை அதிகரிகக சிவனை வணங்க வேண்டும்.

**ரிஷபம்**

ராசியை ஆளும கிரகமும சுககிரன. எனவே இவர்கள் லட்சுமி தேவியை வணங்க, அதிர்ஷ்டம் கொட்டுவதோடு, நேர்மறை ஆற்றலும் அதிகரிக்கும்.

**மிதுனம்**

மிதுன ராசியை ஆளும் கிரகம் புதன். ஆகவே இந்த ராசிககாரரகள தனது சகதியை கூடடுவதறகு ஸ்ரீமன நாராயணனை வணங்க வேண்டும்.

**கடகம்**

கடக ராசியை ஆளும் கிரகம் சந்திரன். இந்த சந்திரனின் வலிமையை இரக்கத்தின் உருவகமான கௌரி அம்மனை மிகுந்த பக்தியுடன் வணங்க வேண்டும்.

(தொடரும்)

# யாழ்.சுப்பர் லீக்-2018



யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் யாழ்.சுப்பர் லீக் -2018 தொடரை யாழ்.நகரில் IPL வடிவில் நடத்தவுள்ளனர். யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 26 கழகங்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட வீரர்களாகவும் தொடருக்கு விண்ணப்பித்தவர்களிலுமிருந்து 15 பேர் கொண்ட 8 அணிகளை ஏலத்தின் மூலம் 8 முகவர்கள் தெரிவு செய்தனர்.

அதில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தில் இருந்து 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

T.டிலோஸன் பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் K.கபிலன், S.அஜீத், R.சரண்றாஜ், I.மதுஸன், P.ஜிவராஜ் ஆகியோர் தெல்லியூர் றைற்றன்ஸ் அணிக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற வீரருக்கு வரவேற்பு

வவுனியா பொகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சரித்த நிர்மல புத்திக்க இந்திரபால ஆசியா 2018 பரா விளையாட்டில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரை வடமாகாணசபை உறுப்பினர் தர்மபாலா செனவித்தினாவின் மூன்று முறிப்பு அலுவலகத்திலிருந்து அவரது பொகஸ்வெவ பகுதிக்கு வாகனப்பேரணியாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.



ஆசியா 2018 பரா விளையாட்டில் ஆசியாவில் நீளம் பாய்தலில் தங்கப்பதக்கம் 200மீற்றர் ஓட்டத்தில் பிறன்ஸ் பதக்கத்தையும் உயரம் பாய்தலில் 5ஆவது இடத்தினையும் இந்தோனேசியா, ஜகார்த்தாவில் இடம்பெற்ற போட்டியில் கலந்து கொண்டு இங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (க-250)

# ஜெனோசன் அதிரடி ஆட்டம் சென்றலைட்ஸ் அணி இறுதிக்குள்

ஏ.பி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் பிளே ஓவ் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில், லீக் சுற்றில் முதலிரு இடங்களையும் பெற்றிருந்த அணிகளான சென்றலைட்ஸ் அணிக்கும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் இடையிலான முதலாவது பிளே ஓவ் ஆட்டம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. நேரம் போதாமையால் ஆட்டம் 18 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. அதற்கிணங்க களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி, ஜெனோசனின் அதிரடிச் அரைச்சதத்தின் உதவியுடன் 18 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெனோசன் 37 பந்துகளில் 51 ஓட்டங்களையும், டர்வின் 45 ஓட்டங்களையும், நிரோஜன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

161 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி பதிலளித்தாடியது. 7 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, போதிய வெளிச்சமில்லை என துடுப்பாட்ட வீரர்கள் நடுவரிடம் முறையிட்டனர். அதனை ஏற்ற நடுவர்கள், அத்துடன் போட்டியை முடித்து, டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 31 ஓட்டங்களால் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவித்தனர்.



வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க-26)

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டக் கொண்டாட்டம்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதை பந்தாட்டக் கொண்டாட்டம் - 2018 எனும்தொனிப் பொருளிலான உதை பந்தாட்டத் தொடர் அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய போட்டியில் மாலை 3.45 மணிக்கு புத்தளம்விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அன்னை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளதுடன் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் மற்றுமொரு போட்டியில் யாழ். சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# மயிலங்காடு ஞானமுருகனை வீழ்த்தியது ஆனைக்கோட்டை யூனியன் அணி




யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதை பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

இதில் ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்று வருகின்றன. 17 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் ஆனைக்கோட்டையூனியன்அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26-106)

# ரஷித் அபார ஆட்டம் இலங்கை அணி தோல்வி



இலங்கை - இங்கிலாந்து இடையிலான 3-வது ஆட்டத்தில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி 2-0 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது.

தம்புல்லாவில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவிற்கு வந்தது. 2ஆவது போட்டியில் மழை பாதித்தாலும் டக் வொர்த் லீவிஸ் முறைப்படி இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையே பல்லேகலே மைதானத்தில் மூன்றாவது போட்டி பகல் -இரவு ஆட்டமாக நடைபெற்றது. மழையால் ஆட்டம் 21 ஓவராக குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இலங்கை அணி சார்பில் நிரோஷன் டிக்வெலாவும், சதிரா சமரவிக்ரமா தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கினர்

முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் டிக்வெலா 36 ஓட்டங்களில் வெளியேறினார். அவரை தொடர்ந்து, சதிராவும் 35 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து இறங்கிய வீரர்கள் நீடித்து நிலைக்கவில்லை. இதனால் இலங்கை அணி நிர்ணயம் செய்யப்பட்ட 21 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்தது.

இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித் 4 விக்கெட்டும், டாம் கர்ரன் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 151 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜேசன் ராய் அதிரடி காட்டி 26 பந்தில் 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அணித்தலைவர் இயன் மார்கன் சிறப்பாக ஆடி அரை சதமடித்து அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றார்.

அவருக்கு பென் ஸ்டோக்ஸ் ஒத்துழைப்பு கொடுத்தார். இதனால் இங்கிலாந்து அணி 18.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அத்துடன், தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. ஆட்ட நாயகன் விருது அடில் ரஷித்துக்கு வழங்கப்பட்டது. இரு அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஆட்டம் நாளை பல்லேகலே மைதானத்தில் நடக்கிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



*2018 இற்கான தேசிய ரீதியில் 43ஆவது கராத்தே சுற்றுப் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த 13,14 ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டியில் 13 வயதுப் பிரிவில் பங்கு கொண்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் உ.சஞ்ரிஸ் வெண்கலப்பதக்கத்தை வென்றார்.*

## பொது எதிரணியால்...

கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளை சமாளிப்பதற்காகவும் தம் மீதான நீதிமன்ற விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே எதிரணியினர் மாற்று அரசாங்கத்தை உருவாக்குவதாக, போலி பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். (ம)

## நாட்டின் அரசியல்...

அமைச்சர்கள் தாங்கள் இஷ்டப்படி நடப்பதும் என்று நாடு செல்கின்றது. இவ்வாறு பொறுப்புவாய்ந்தவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் நாட்டினை எவ்வாறு அபிவிருத்தி பாதையில் இட்டுச்செல்ல முடியும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆலோசனையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொதுஜன பெரமுன கட்சிசார் பொறியியலாளர்கள் மன்றம் நேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தனது முதல் கூட்டத்தொடரை தாஜ்சமுத்திரா ஹோட்டலில் ஆரம்பித்து வைத்தது.

இந்நிகழ்வில் பொதுஜன பெரமுன கட்சி சார் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்ட பொறியியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்தார். (ம)

## இந்தியாவுக்கு...

சிங்கவின் இந்த விஜயம் அமைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 15 பேர் கொண்ட குழுவொன்றும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்திய-இலங்கை...

அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை திரிபுபடுத்தி ஊடகங்களுக்கு தெரிவித்தவர்கள் தொடர்பில் தேடிப்பார்ப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இந்த செயலானது வெட்கப்படவேண்டிய விடயம் என்பதுடன் மிகவும் பயங்கரமான விடயமாகும். அத்துடன் இந்திய-இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் இருந்துவரும் நல்லுறவில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்தில் மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஊடகப்பேச்சாளரும் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

இந்திய புலனாய்வு அமைப்பு தன்னை கொலைசெய்வதற்கு சதி செய்வதாக ஜனாதிபதி அமைச்சரவை கூட்டத்தின்போது தெரிவித்ததாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

குறித்த பத்திரிகையின் ஊடகவியலாளர் இந்த தகவல்களை அமைச்சரவையில் இருக்கும் 4 அமைச்சர்கள் குறிப்பிட்டதாகவே தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் இவ்வாறு தெரிவித்தவர்கள் தைரியம் இருந்தால் அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு தெரிவித்திருக்கவேண்டும். இதுதொடர்பாக அடுத்த அமைச்சரவை கூட்டத்தின்போது ஆராயப்படும் எனவும் தெரிவித்தார். (ம)

## ஆவா குழுவை உருவா...

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆடியபாதம் வீதியில் இளைஞர் ஒருவரைத் தாக்கி காயம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் நால்வரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் இளைஞர் ஒருவரை துரத்திச் சென்றனர். அவர்களிடம் இருந்து தப்பிக்க நினைத்த இளைஞன், கிணறு ஒன்றுக்குள் குதித்துள்ளார். கிணற்றுக்குள் வீழ்ந்த இளைஞன் மீது சந்தேகநபர்கள் நால்வரும் கற்களால் தாக்கினர் என்று தமக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ், மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

ஆவா குழு என்ற ஒன்றை உருவாக்கியது கோப்பாய் பொலிஸார்தான். இளைஞர்களுக்கு இடையிலான மோதலை வைத்து அவர்களை ஆவா குழு என அடையாளப்படுத்தி இன்று அது பெரும் வன்முறைகளுக்கு வழி வகுத்துள்ளது.

வாழையே இல்லாத தோட்டத்தில் கைக்குண்டு ஒன்றை வைத்துவிட்டு வாழைத் தோட்டத்தில் கைக்குண்டு மீட்டதாக பொய் வழக்கைப் போட்டவர்களும் கோப்பாய் பொலிஸார்தான். அவ்வாறானவர்களால் முற்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் அப்பாவிகள். அவர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

வழக்கை ஆராய்ந்த பதில் நீதிவான், பிரதான நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பத்தை முன்வைக்குமாறு தெரிவித்து சந்தேகநபர்களின் விளக்கமறியலை வரும் 25ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். (ம-9)

## பிரதிப் பொலிஸ்மா...

உதவி பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸ் ஆகியோரை கொலை செய்ய சதி செய்யும் விதமாக தொலைபேசியில் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படும் விவகாரம் தொடர்பில் விசாரணைகளுக்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா நேற்று வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜரானார்.

கொலை சதி விவகாரம் குறித்த விசாரணைகளுக்காக கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரகசிய பொலிஸார் முன் ஆஜராக அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் ஆஜராகவில்லை.

இந் நிலையிலேயே நேறறு பிரதி பொலிஸமா அதிபர் நாலக சில்வா, சி.ஐ.டியின் மனிதப் படுகொலைகள் குறித்த விசாரணை அறையின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது.

அந்தவகையில் நாலக சில்வாவிடம் 9 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. அத்துடன் அவரை மீண்டும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு உத்தரவிட்டதாக அவர் தெரிவித்தார். (ம)

## எமது இன வரலாறு...

டலுவல்கள், அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தமிழர் நாகரிக மையம் (Tamils' Civilization Hub) கருத்திட்ட அங்குரார்ப்பணம் நேற்று மல்லாவி மாந்தைகிழக்கு, அம்பாள்புரத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட வரலாற்றைக் கொண்டதும் நாகரிக வளர்ச்சி பெற்றதுமான தமிழ் இனத்தின் வரலாறுகளும் வாழ்வியல் அடையாளங்களும் போற்றிப் பாதுகாக்கப்படாமையாலும் அவை பற்றிய குறிப்புக்கள் மற்றும் வரலாற்றுச்சுவடிகள் பேணப்படாமையாலும் இன்று தமிழினத்தின் இருப்பும் அதன் தொன்மையும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளன.

எனவே எமது அடையாளங்கள் பேணப்படவேண்டும். எமது பண்டைய வாழ்க்கை முறைத் தத்துவங்களும் அவற்றுள் பொதிந்துகிடந்த விஞ்ஞான அறிவியல் தத்துவங்களும் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் அவை போற்றிப்பாதுகாக்கப்படவேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9,281)

## மன்னார் காட்டு பகுதி...

நேற்று வியாழக்கிழமை மாலை ஒரு தொகுதி வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பற்றைக்குள் ஒரு தொகுதி வெடி பொருட்கள் காணப்பட்டதை அவதானித்த விமானப்படை வீரர்கள் உடனடியாக பொலிஸார் ஊடாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட வெடி பொருட்களை மீட்பதற்கு மன்னார் நீதி மன்றம் அனுமதி வழங்கிய நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை குறித்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் மற்றும் விமானப்படை வீரர்கள் இணைந்து குறித்த வெடி பொருட்களை மீட்டுள்ளனர்.

இதன்போது ஆட்லரி குண்டுகள்-04, சிஸ்ரி மோட்டார் வெடிகுண்டு-01, பயூஸ்-04, கைக்குண்டு-01, சிறிய ரககுண்டு-01 ஆகியன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட வெடி பொருட்களை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் மீட்புக்குழு ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

## எரிபொருள் விலை...

48 சதம் வரியும் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 53 ரூபா 68 சதம் வரியும் அரசால் அறவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் மே மாதம் 11ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகள் மாற்றம் செய்யப்படுகின்றன.

எரிபொருள் விற்பனை விலை =வி1 + வி2 + வி3 + வி4

வி1-சிங்கப்பூரில் ஒரு பரல் கச்சாய் எண்ணெய் வாங்கப்படும் விலையுடன் செலவுகளை இணைத்த பெறுமதி

வி2-துறைமுகச் செலவுகள், விநியோகச் செலவுகள், இருப்பிலிருக்கும் போதான செலவுகளை உள்ளடக்கி விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவு.

வி3-பிரத்தியேக செலவுகள், தேய்மானச் செலவுகள் மற்றும் செலவுக் கூறுகள்.

வி4-இறக்குமதித் தீர்வை, சுங்கத் தீர்வை, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக்கான வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி.

இந்தச் சூத்திரத்தின் அடிப்படையில் மக்கள் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி எரிபொருள்களின் விலைகளை தயாரித்துப் பார்க்க முடியும். அது ஒரு பொழுதுபோக்காகவும் அமையும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (ம)

## ஜனாதிபதி மைத்திரிபால...

பெற்ற தொலைபேசி உரையாடல் தொடர்பில் அறிக்கையொன்றில் இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன றோ குறித்து தான் தெரிவித்ததாக வெளியாகும் தகவல்களை மறுத்துள்ளார் என இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்திய பிரதமரின் அலுவலகம் இது குறித்து செய்திக்குறிப்பொன்றை விடுத்துள்ளது. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமருடன் தொலைபேசி மூலம் உரையாடினார் என இந்திய பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி தன்னையும் இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளரையும் கொலை செய்வதற்கான சதி முயற்சிகளின் பின்னால் இந்திய புலனாய்வு அமைப்பு உள்ளதாக தான் குற்றம்சாட்டியதாக வெளியாகியுள்ள செய்திகளை நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என இந்திய பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தீயநோக்கத்துடனான தவறான அறிக்கைகள் ஆதாரமற்றவை பிழையானவை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் எனவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இந்திய பிரதமர் அலுவலகம் இந்த செய்திகள் இரு தலைவர்களிற்கு இடையிலான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டவை என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார் எனவும் தெரிவித்துள்ளது.

இருநாடுகளிற்கும் இடையிலான உறவுகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாக கொண்ட முயற்சி இதுவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த செய்திகளை நிராகரிப்பதற்காக தானும் இலங்கை அரசாங்கமும் உடனடியாக எடுத்துள்ள நடவடிக்கைகளையும் மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமருக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திரமோடியை இலங்கையின் உண்மையான நண்பராகவும் தனது சிறந்த நண்பராகவும் கருதுவதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் எனவும் இந்திய பிரதமரின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பரம் நன்மையளிக்ககூடிய உறவுகளை தான் மதிப்பதாக அவர் வலியுறுத்தியுள்ளார். இந்திய பிரதமருடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆர்வமுள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்து ள்ளார் எனவும் இந்திய பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பில் தீயநோக்கம் கொண்ட தகவல்களை நிராகரிப்பதற்கு இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் எடுத்துள்ள துரிதநடவடிக்கையை இந்திய பிரதமர் பாராட்டியுள்ளார் என இந்திய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அயல்நாடுகளிற்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையை மீண்டும் இந்திய பிரதமர் வலியுறுத்தியுள்ளார் என இந்திய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

### மஹஜன சம்பத

திகதி 2018/10/18
சீட்டிழுப்பு இலக்கம் 3770
ஆங்கில எழுத்து: A
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 5 0 4 6 1
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.10.18
சீட்டிழுப்பு இலக்கம் 1916
ஆங்கில எழுத்து: O
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 29 40 52 63
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2018/10/18
சீட்டிழுப்பு இலக்கம் 461
லக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 06 10 21 64
போனஸ் இலக்கம்: 23
தேசிய லொத்தர் சபை

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1514 திகதி 2018/10/18
Y A D
வெற்றி இலக்கங்கள்: 21 23 46 73
போனஸ் இலக்கம்: 29
தேசிய லொத்தர் சபை

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(6088)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


# உழவு இயந்திரம் -...

இருந்து யாழ்பாணத்துக்கு தண்ணீர் ஏற்றி வந்த குளிரூட்டப்பட்ட ஹன்டர் ரக வாகனம் வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் எரிபொருள்நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் நெல்லு வெட்டும் இயந்திரத்தை ஏற்றிய நிலையில் உழவு இயந்திரம் தரித்து நின்றது. அவ்வேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தண்ணீர் ஏற்றிய ஹன்டர் ரக வாகனம் மோதியது.

விபத்தில் ஹன்டர் வாகனத்தில் பயணி த்த யாழ்ப்பாணம் வடமராட்சியை சேர்ந்த மரியதாஸ் நிறோசன் உயிரிழந்தார். அத்துடன் மற்றொரு இளைஞனான செ.அயந்தன் என்பவரின் கை ஒன்று துண்டிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தகவல் தெரிவித்தது.

உழவு இயந்திரத்தில் இருந்த இளைஞன் படுகாயமடைந்ததுடன் மற்றுமொருவர் சிறு காயங்களிற்கு உள்ளாகியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250-281)

# யாழுக்கு பேரு...

முன்பாக பேருந்தை வழிமறித்த பொலிஸார் குறித்த நபரை கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

கிளிநொச்சி விசேட பிரிவு பொறுப்பதிகாரி டி.எம்.சத்துரங்க தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த கைது இடம்பெற்றுள்ளது

கஞ்சாவுடன் கைதானவர் ரம்பாவையை சேர்ந்த இளைஞன் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்

கைது செய்யப்பட்டவரையும் சான்றுப் பொருட்களையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆயர்ப்படுத்த இருப்பதாக்க பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-312)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: நிறஞ்சன் நகைமாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129 (C-4126)



## நால் வெளியீட்டுவிழா

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் எழுதிய "இலங்கைத் தமிழ் அரசியல் இனமோதலும் மிதவாதமும்"

காலம் : இன்று (19.10.2018) வெள்ளி
நேரம் : பிற்பகல் 4.00 மணி
இடம் : துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்

**பிரதம விருந்தினர்**
க.வி.விக்னேஸ்வரன்
(கௌரவ முதலமைச்சர் வடக்கு மாகாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
சுரேஸ் க.பிறேமச்சந்திரன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
ந.சிவசக்திஆனந்தன்
(நாடாளுமன்ற உறுப்பினர்)

**கௌரவ விருந்தினர்**
மாணிக்கவாசகம்
(மூத்த ஊடகவியலாளர்)

**மதிப்பீட்டுரை**
கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்
(அரசியல்துறைத் தலைவர் யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி-4182) - விழாக் குழு



## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி:**
பரந்தனில் 20.10.2018 (நாளைய தினம்)
யாழ்ப்பாணத்தில் 27.10.2018

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை

இல.101, பிரதான வீதி, (2-ம் குறுக்குத் தெரு சந்தியில்) யாழ்ப்பாணம்.

பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774441082, 0774405969 (C-4183)



**இலஞ்ச ஊழல் புலனாய்வு உத்தியோகத்தர்**

விசேட இறுதி கருத்தரங்கு
மூன்று வினாத்தாள் களுக்கும் உரிய விடயங்கள்
சனி (20/10), ஞாயிறு (21/10), புதன் (24/10)
காலை 9.00 - 3.30 மணிவரை
தொடர்புகளுக்கு: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)



## கட்டார் வேலைவாய்ப்பு

எலக்ரீஷியன், பிளம்பர், மெக்கானிக், டிரைவர், A/C டெக்னீஷியன், Waiter, Office Boy/Girls

Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
ஆரம்பக் கட்டணம் இல்லை
077 00 38 215
021 221 9 221
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
(C-4159)
221-1/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-4077)

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு அமெரிக்கா செல்லும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | சங்கானை | ஊர்காவத்துறை | கரணவாய் | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா



## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் நல்லசூழலில் வீடு வாடகைக்கு தேவை.

T.P.0779086737 (C-4181)



## பணிநிலை வேண்டுகை

எமது நிறுவனத்திற்கு கணினி தட்டெழுத்தாள் டிசைனர் (பெண்) தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பயிலுநர்களும் 21.10.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 12.00 மணிக்கு இடையில் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஒவ்செற் பிறின்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே: 077 306 8982 (6110)



## Maths & English Group Classes

தரம் 6,7,8,9,10 மற்றும் O/L மாணவர்களுக்கான கணித, ஆங்கில குழு ரீதியான, தனிப்பட்ட வகுப்புக்கள் (Tamil / English Medium) அனுபவமிக்க பிரபல பாடசாலை ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 0774540529 (யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை) (6102)

விரைவில் இணுவில் புகையிரத வீதி அருகாமையில் வகுப்புக்கள் ஆரம்பம்.



## அமெரிக்க அதிஸ்ட விசா-

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்

நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்

55000 இலவச விசாக்கள்

0768226243

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 60 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம்.கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்திலருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



கமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை

V2 TRAVELS

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226244 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |



## புலமை கல்வி நிறுவனம்

சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

புதிய புலமைப் பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
(விஜயதசமியன்று)

புலமை கல்வி நிறுவனத்தின்
தரம் - 4 (தற்போதைய தரம் - 3), தரம் - 5 (தற்போதைய தரம் - 4)
காலம்: இன்று (19.10.2018) வெள்ளிக்கிழமை
நேரம் : தரம் 4 - மாலை 4.30 மணி, தரம் - 5 மாலை 5.00 மணி
ஆசிரியர்: திரு.க.கலாமோகன் (B.A,Dip in Teach)

குறிப்பு : மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்க உள்ளதால் உடன் முந்துங்கள்.

(6106) தொடர்புகளுக்கு: 0772121915, 0777607071



## 36-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 26 . 06 . 1940



மறைவு 26 . 10 . 1982

அமரர் சின்னத்தம்பி கந்தையா (பொலிஸ் சார்ஜன்ட்)

திதி - விஜயதசமி

நல்லதொரு குடும்பத் தலைவனாய்
பாசமுடன் குடும்பத்தில் அனைவரையும்
சிறப்புடன் பார் புகழ வாழவைத்த
அன்புத் தெய்வமே என்றும் உங்களின்
நினைவுகளுடன் வாழும்

உசன், மிருசுவில். - குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.